# பொது நம்பிக்கை பொறுப்பாளருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள மரணச் சொத்துக்களின் முகாமைத்துவம் தொடர்பான மதிப்பீடு



| தொடர் இலக்கம் | விபரம் | பக்கம் |
|---|---|---|
| 1 | நிறைவேற்றுப் பொழிப்புரை | |
| 2 | அறிமுகம் | |
| | 2.1 பின்புலம் | |
| | 2.2 கணக்காய்விற்கான தலைப்பை தெரிவு செய்தல் | |
| | 2.3 கணக்காய்வின் நோக்கம் | |
| | 2.4 கணக்காய்விற்கான அதிகார பலம் | |
| | 2.5 கணக்காய்வு விடயப் பரப்பு | |
| | 2.6 விடயப்பரப்பு வரையறுக்கப்படல் | |
| | 2.7 கணக்காய்வு மூலப்பிரமாணங்கள் | |
| 3 | அவதானிப்புக்கள் | |
| | 3.1 நிறுவன பின்புலம் | |
| | 3.2 மரணச் சொத்துக்களுக்கான ஆதனங்களை தீர்ப்பதற்கான நடைமுறைகள் | |
| | 3.3 மரணச் சொத்து ஆதனங்களின் முகாமைத்துவ மதிப்பீடு | |
| 4 | பரிந்துரைகள் | |

## 1. நிறைவேற்றுப் பொழிப்புரை

-----------------------------------------------

1922 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டளைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் பதவிக்கு சாதாரண பொறுப்பாளராக நடவடிக்கையை மேற்கொள்ளல், காப்புறுதி பாதுகாவலராக அல்லது பாதுகாப்பு பாதுகாவலராக நடவடிக்கையை மேற்கொள்ளல், சொத்துக்கள் சேகரித்தல் கட்டளையின் கீழ் சொத்துக்கள் சேகரிப்பாளராக நடவடிக்கையை மேற்கொள்ளல், இளம் வயதினர்களின் சொத்துக்களின் பாதுகாவலராக நடவடிக்கையை மேற்கொள்ளல். மன நலன் பாதிப்புக்குள்ளான நபரின் சொத்துக்களின் முகாமையாளராக நடவடிக்கையை மேற்கொள்ளல். ஆகிய காரியங்கள் வழங்கப்பட்டுள்ளன. வெவ்வேறு தரப்பினர்களினால் வெவ்வேறு அபிலாசைகளை நிறைவேற்றிக்கொள்ளும் நோக்கில் அந்த சொத்துக்களின் பாதுகாவளர் அல்லது நிறைவேற்றுபவராக நியமிக்கப்பட்டுள்ள மரணச்சொத்துக்களுக்குரிய பல வருடங்களாக தீர்க்கப்படாத, முரண்பாடுகள் காணப்படுதல் இந்த செயலாற்றல் கணக்காய்விற்கான அடிப்படையாக உள்ளது.

அதன்படி விசாரணைப்பிரிவில் காணப்படுகின்ற அவ்வாறான 15 மரணச்சொத்துக்கள் சம்பந்தமாக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் போது பொது நம்பிக்கையாளரின் பொறுப்புக்களை வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமான வகையில் நிறைவேற்றுவதற்காக உருவாக்கப்பட்டிருந்த நிறுவன பின்புலம், மரண சொத்துக்களை தீர்ப்பதற்கான நடைமுறைகள் மற்றும் நிர்வாக உரிமங்கள் பத்திரத்திற்கு உட்படுத்தப்பட்ட பின்னர் அந்த சொத்துக்களை முகாமைத்துவம் செய்தல் மற்றும் அது தொடர்பாக ஏற்படுகின்ற முரண்பாடான சந்தர்ப்பங்களிலே நடவடிக்கை மேற்கொள்ளல் தொடர்பாக மதிப்பீட்டிற்கு உள்ளடக்கப்பட்டது. இதன் போது நிறுவன நோக்கங்களை வினைத்திறனாக நிறைவேற்றுவதற்காக தேவையான வளங்களை தேவையின் பொருட்டு முன்னுரிமைப்படுத்தி வழங்காமை, உபாயகரமான திட்டங்களை தயாரித்திருக்காமை, அமைப்பின் வியூகத்தில் மற்றும் நிர்வாக வியூகத்தில் நிலவுகின்ற பலவீனங்கள் காரணமாக பொது நம்பிக்கை பொறுப்பாளரினால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் நிறுவன பின்புலம் உருவாக்கப்பட்டிராமை இந்த சொத்துக்கள் தொடர்பாக பல வருடங்களாக காணப்படுகின்ற முரண்பாடுகள் தீர்க்கப்படாமைக்கான காரணங்களாக காணப்பட்டது. மேலும், பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள சொத்துக்களை அடையாளங்காணுதல், தீர்த்து வைத்தல், பாதுகாத்தல் ஆகிய நடவடிக்கைகளுக்காக காட்டப்படுகின்ற அக்கறை குறைவடைதல் மற்றும் அசாதாரணமாக காலத்தை கழித்தல். நீதிமன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதில் மந்தப் போக்கான நிலைமை, மரணச் சொத்து உரிமையாளரின் நோக்கத்திற்கு எதிரான விடயங்களுக்காக வளங்கள் மற்றும் காலத்தை தேவையற்ற வகையில் செலவிடுதல், சொத்துக்களை முறையாக

முகாமைத்துவம் செய்யாததன் காரணமாக முரண்பாடுகள் ஏற்படுதல் ஆகிய காரணங்களும் இந்த சொத்துக்கள் தொடர்பாக காணப்படுகின்ற முரண்பாடுகள் நீண்டகாலமாக தீர்க்கப்படாமைக்கான காரணங்களாக காணப்பட்டது. இந்த அனைத்து காரணங்கள் காரணமாக வெவ்வேறு தரப்பினரால் இந்த சொத்துக்கள் பொது நம்பிக்கை பொறுப்பாளருக்கு வழங்கப்பட்டு எதிர்பார்க்கப்பட்ட வெவ்வேறு பொருளாதார, சமூக மற்றும் சமய நோக்கங்கள் போதுமான அளவு நிறைவேற்றப்பட்டிராமை காணக்கூடியதாக இருந்தது.

இந்த முரண்பாடுகளையும் பலவீனங்களையும் தவிர்த்துக் கொண்டு மரணச்சொத்து உரிமையாளரின் நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக உபாயகரமான திட்டங்களை தயாரிப்பதற்கும், நிர்வாக வியூகத்தின் பலவீனங்களை சரி செய்வதற்கும் ஒவ்வொரு மரணச்சொத்து தொடர்பாகவும் உள்ள நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான முன்னேற்றத்தை காலத்திற்கேற்ப மதிப்பிடவும், சட்டத்தரணிகளுடன் கலந்துரையாடி துரிதமாக முடிவுறுத்தக் கூடிய வழக்கு நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டு வரவும், வரலாற்றுப் பெறுமதி வாய்ந்த சொத்துக்களை காப்புறுதிக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், நிதியத்தினை ஆக்கபூர்வமான முதலீட்டு வழிகளில் முதலீடு செய்வதற்கும், வேறு நபர்களுக்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள் தொடர்பாக இரு தரப்பினர்களுக்குமிடையில் முறையான ஒப்பந்தத்திற்கு முனைவதற்கும் அனுமதியற்ற நிர்மாணங்கள் காணப்படுகின்ற தோட்டங்களில் அளவீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு அனுமதியற்ற நிர்மாணப்பணிகள் தொடர்பாக சட்டபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குமான செயல் நடவடிக்கைகளை பின்பற்றுவதற்கு பரிந்துரை செய்ய முடியும்.

## 2. அறிமுகம்

--------------

### 2.1 பின்புலம்

--------------

1931 ஆம் வருட 11 ஆம் இலக்க மற்றும் 1938 ஆம் வருட 59 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் மூலமாகவும் 1973 ஆம் வருட 44 ஆம் இலக்க மற்றும் 1975 ஆம் வருட 25 ஆம் இலக்கமுடைய சட்டத்தின் மூலமும் 1983 ஆம் வருட 41 ஆம் இலக்க மற்றும் 1988 ஆம் வருட 61 ஆம் இலக்க சட்டத்தின் மூலமாகவும் திருத்தப்பட்ட 1922 ஆம் வருட 1 ஆம் இலக்க பொது நம்பிக்கை பொறுப்பாளர் கட்டளைச் சட்டத்தின் கீழ் பொது நம்பிக்கை பொறுப்பாளர் பதவி சுயாதீனமான சட்டபூர்வமான தனிநபராக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

“1922 ஆம் வருட 1 ஆம் இலக்க பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டளைச் சட்டம் மற்றும் 1917 ஆம் வருட 09 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் ஏற்பாட்டிற்கு அனுகூலமாக இலங்கை குடியரசிற்குள் செல்லு படியாக காணப்படுகின்ற சட்டபூர்வமான கட்டமைப்பின் கீழ் நம்பகத்தன்மையுடன் பக்கச்சார்பின்றி மற்றும் வெளிப்படைத்தன்மையுடனான இலங்கையின் பொது நம்பிக்கை தலைமை அதிபதி மற்றும் அவர்களின் பதவியணியினர் நன்னோகத்துடன் தன்னுடைய தொழில்சார் பொறுப்புக்களை மற்றும் கடமைகளை முழுமையாக நிறைவேற்றுதல்” பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் நோக்கமாகும்.

இலங்கையின் பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு மற்றும் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்திற்கு சாட்டப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்களை சட்டபூர்வமான கட்டமைப்பின் கீழ் வெளிப்படைத் தன்மையாக நடைமுறைப்படுத்தல் மற்றும் பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்தின் மீது நம்பிக்கை வைத்து சேவையை பெற்றுக்கொள்வதற்காக சமூகந்தருகின்ற தரப்பினருக்கு பக்கச்சார்பின்றி மற்றும் வினைத்திறனாக உச்ச சேவையொன்றை வெளிப்படைத்தன்மையுடன் பெற்றுக்கொடுத்தல் மற்றும் அதனூடாக இலங்கை பொது நம்பிக்கைப் பொறுப்பானர் திணைக்களத்தின் தேசிய மற்றும் சர்வதேசத்தின் நன்மதிப்பு அதிகரிக்கும் வகையில் மற்றும் வரவேற்கத்தக்க வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் இலக்காகும்.

2.1.1 பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டளைச் சட்டம் சிவில் நடைமுறைகளின் குறியீடு நீதித்துறை சட்டத்தின் அமைப்பு மற்றும் பிற எழுதப்பட்ட சட்டங்களின் மூலம் பின்வரும் பொறுப்புக்கள் பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.

(அ) சாதாரண பொறுப்பாளராக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

(ஆ) காப்புறுதி பொறுப்பாளர் அல்லது பாதுகாப்பு பொறுப்பாளராக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(இ) சொத்துக்களை சேகரிக்கும் தீர்ப்பின் கீழ் சொத்துக்கள் சேகரிப்பாளராக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(ஈ) இளம் வயதினரின் சொத்துக்கள் பொறுப்பாளர் அல்லது உதவி புரியும் நண்பன் (பாதுகாப்பு முகாமையாளர்) ஆக நடவடிக்கைகளை மேற்கொள்ளல் (மாவட்ட நீதிமன்றத்தின் மூலம் வழங்கப்பட்ட சந்தர்ப்பம்)

(உ) மன நல பாதிப்புக்குள்ளான நபரின் சொத்துக்கள் முகாமையாளராக நடவடிக்கைகளை மேற்கொள்ளல் (மாவட்ட நீதிமன்றத்தின் மூலம் வழங்கப்பட்ட சந்தர்ப்பம்)

(ஊ) அசைவற்ற சொத்துக்களை உடன்படிக்கை செய்யப்பட்ட முகாமையாளராக நடவடிக்கைகள் மேற்கொள்ளல் (பாதுகாப்பு பொறுப்பாளராக முன்வரும் சந்தர்ப்பங்களிலே அந்த பொறுப்புக்களில் நியமிக்கப்படவுள்ள ''பொறுப்பாளர் சபை'' ஊடாக அவ்வப்போது எடுக்கப்படுகின்ற தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு மாத்திரம் பாதுகாப்பு பொறுப்பாளர் பொறுப்பு கூறுவார்.)

(எ) வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களுக்கு அட்டோனி அதிகாரத்தின் ஊடாக அவர்களுக்கு சேர வேண்டிய பணத்தை பெற்றுக்கொடுத்தல் அல்லது செலுத்தலுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(ஏ) சிவில் நடைமுறைகளின் விதிமுறைகள் சட்டத்தின் ஏற்பாட்டின் கீழ் மேன்மை தாங்கிய நீதிமன்றத்தின் ஊடாக சொத்துக்கள் தொடர்பாக மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(ஐ) மேன்மை தாங்கிய நீதிமன்றத்தின் ஊடாக ஒப்படைக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களிலே இறுதி விருப்ப சாட்சியமுள்ள நபரின் நிர்வாக உரிமையாளராக நடவடிக்கையை மேற்கொள்ளல்.

(ஒ) குற்றத்திற்காக சிறைப்படுத்தப்பட்டவர்களின் சொத்துக்களின் முகாமையாளராக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(ஓ) எந்தவொரு நபரினதும் இறுதி விருப்ப பத்திரமொன்றை பாதுகாப்பான வைப்பிட்டு காக்ககூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(ஔ) விகாரைகளின் சொத்துக்களின் பொறுப்பாளராக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

2.1.2 இந்த வேலைக்குரிய திணைக்களத்தினால் திட்டமிடப்படுகின்ற சேவைகள் பின்வருமாறு காணப்படல் வேண்டும்.

(அ) கல்வியைத் தொடர்கின்ற நிதி நிலையில் மிகவும் கஷ்டங்கள் நிலவுகின்ற பிள்ளைகளை ஊக்குவிப்பதற்காக புலமைப்பரிசில்களை பெற்றுக்கொடுத்தல்.

(ஆ) கதியற்ற மற்றும் அவசர உதவி தேவைப்படும் நோயாளர்களுக்கு வைத்திய உதவியைப் பெற்றுக் கொள்வதற்காக வைத்திய நன்கொடைகளை பெற்றுக்கொடுத்தல்.

(இ) சமய ஸ்தளங்களை நிர்வகித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் என்பவற்றுக்காக உருவாக்கப்பட்டுள்ள நோக்கங்களின் அடிப்படையில் நிதியுதவிகைள வழங்குதல்.

(ஈ) புண்ணிய உதவி நடவடிக்கைகள்

(உ) பல்வேறு காரணங்களினால் சீவிப்பதற்கு வசதியில்லாத கதியற்ற நபர்களுக்கு மற்றும் அவ்வாறான நபர்கள் காணப்படுகின்ற நிறுவனங்களுக்கு உதவி செய்தல்.

(ஊ) நம்பிக்கைப் பொறுப்புக்கள் / மரணச் சொத்துக்களை முகாமைத்துவம் செய்தல்.

(எ) அரச நிறுவனமொன்று என்ற வகையில் ஈட்டுகின்ற வருமானத்தில் சதவீதத்தை பொது திறைசேரிக்கு வழங்குதல்.

(ஏ) கோயில்கள் மற்றும் ஆலயங்கள் சட்டத்தின் கீழ் அரசிற்கு உரித்தாக்கப்படுகின்ற அசைவற்ற சொத்துக்களுக்காக கிடைக்கப்பெறுகின்ற நட்டஈடு பௌத்த நடவடிக்கைகள் ஆணையாளர் நாயகத்தின் பரிந்துரையின் அடிப்படையில் விநியோகித்தல்.

(ஐ) வரையறுக்கப்பட்ட ஐக்கிய செய்திப் பத்திரிகை கம்பனியின் பங்குகளின் பொறுப்பை அரசிற்காக ஏற்று அந்த கம்பனியின் நடவடிக்கைகளை செயற்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

(ஒ) வெளிநாட்டு நட்டயீடாக கிடைக்கப் பெறம் பணத்தை தங்கியிருப்போருக்கு அல்லது சட்டரீதியான உரிமையாளர்களுக்கிடையில் பங்கிடுதல்.

(ஓ) அரச நிறுவனமொன்று ஈட்டிக்கொள்கின்ற வருமானத்தின் சதவீத்தை திறைசேரிக்கு வழங்குதல்.

பல்வேறு தரப்பினர்களினால் அவர்களது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக தங்கள் சொத்தக்களின் கடைசி விருப்ப சாட்சியத்தின் மூலம் பொது நம்பிக்கை பொறுப்பாளருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், திணைக்களத்தினால் பெற்றுக் கொடுக்கப்பட்ட தகவல்களின் படி 2019 ஜுலை 31 ஆம் திகதியில் 110 மரணச் சொத்துக்கள் தொடர்பாக செயற்படுத்துவதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தது. அவ்வாறே, திணைக்களத்திற்கு சாட்டப்பட்டுள்ள சட்டபூர்வமான கட்டமைப்பின் கீழ் நம்பகத்தன்மையுடைய பக்கச்சார்பின்றி மற்றும் வெளிப்படைத் தன்மையுடனான நடவடிக்கைகளை மேற்கொண்டு மரணச் சொத்துக்காரரின் நோகத்ததை நிறைவேற்றிக் கொள்ளுதல் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் பொறுப்பாகும்.

## 2.2 கணக்காய்விற்காக தலைப்பைத் தெரிவு செய்தல்

---

சொத்துக்கள் உரிமையாளர்களினால் தமது மரணத்தின் பின்னர் தமது சொத்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்து கொள்ளும் பொருட்டு சொத்துக்களை பகிர்ந்தளித்தல், அல்லது அதனால் நிறைவேற்றிக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்டு பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு கடைசி விருப்ப சாட்சியத்தின் ஊடாக தமது சொத்துக்கள் ஒப்படைக்கப்படுவதுடன், பொது நம்பிக்கைப் பொறுப்பாளரினால் அந்த சொத்துக்களின் சட்டபூர்வமான பொறுப்பை உறுதி செய்து கொள்ளும் பொருட்டு சொத்துக்களை பாதுகாத்துக் கொள்வதற்கும் கடைசி விருப்ப சாட்சியத்தின் ஊடாக ஒப்படைக்கப்பட்ட இறந்த மரணச் சொத்துக்காரரின் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கும் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டளைச் சட்டத்தின் கீழ் கடமைப்பட்டுள்ளது.

திணைக்களத்தினால் பெற்றுத் தரப்படும் தகவல்களின் படி தற்போது செயல் மட்டத்தில் காணப்படுகின்ற 110 எண்ணிக்கையான மரணச் சொத்துக்களில் 57 அதாவது நூற்றுக் 50 க்கு அதிகமான அளவானவைக்குரிய மரணச் சொத்து கோப்புக்கள் பல்வேறு முரண்பாடுகள் காரணமாக பல வருடங்களாக விசாரணைப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. அந்த மரணச் சொத்துக்களின் முரண்பாடுகள் தீர்க்கப்பட்டு மரணச் சொத்துக்காரரின் அபிப்பிராயங்களை நிறைவேற்றும் செயல் திறனான மதிப்பீட்டிற்காக இந்த தலைப்பு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

## 2.3 கணக்காய்வின் நோக்கம்.

-----------------------------------

(அ) மரணச் சொத்துக்கள் தொடர்பான சட்டபூர்வமான பின்புலம் தொடர்பான பின் விபரங்களை மேற்கொள்ளல்.

(ஆ) அமைப்பு வியூகம் மற்றும் நிர்வாக பலவீனங்களை கலந்துரையாடல் மேற்கொள்ளல்.

(இ) கடைசி விருப்ப சாட்சியத்தை பொறுப்பெடுத்தல் மற்றும் பாதுகாத்தலுக்கான ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தல்.

(ஈ) மரணச் சொத்துக்களை தீர்ப்பதற்கான நீதிமன்ற தீர்ப்பை நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளின் மதிப்பீடு

(உ) மரணச் சொத்துக்காரர்களின் நோக்கத்தை நிறைவேற்றும் செயற்பாட்டின் மதிப்பீடு.

## 2.4 கணக்காய்விற்கான அதிகார பலம்.

----------------------------------------------------

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார அதிகாரச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க இந்த செயற்திறன்கள் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

## 2.5 கணக்காய்வு விடயப்பரப்பு

-----------------------------------

பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தினால் மேற் குறிப்பிடப்பட்டுள்ள மரணச் சொத்துக்கள் 5 பிரிவுகளின் கீழ் முகாமைத்துவம் மேற்கொள்ளப்படுகின்றன.

| | பிரிவு | மரணச் சொத்துக்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| (அ) | சமயப் பிரிவு | 09 |
| (ஆ) | வைத்திய உதவிப் பிரிவு | 11 |
| (இ) | மாணவர் உதவிப் பிரிவு | 11 |
| (ஈ) | தனிப்பட்ட நம்பிக்கை பொறுப்பு பிரிவு | 22 |
| (உ) | விசாரணைப் பிரிவு | 57 |
| | | 110 |

மரணச் சொத்துக்களில் நூற்றுக்கு 50 க்கு அதிகமான அளவு விசாரணைப் பிரிவினால் முகாமைத்தவம் செய்யப்படுவதுடன் காணப்படுகின்ற வளங்கள் மற்றும் கால நேரங்களின் அடிப்படையில் அதில் 15 மரணச் சொத்துக்களின் நியதியொன்று தெரிவு செய்யப்பட்டு அந்த மரணச் சொத்துக்களுக்கு உரிய ஆதனங்களை தீர்த்த வைத்தல், சொத்துக்கள் முகாமைத்துவம், நோக்கத்தை நிறைவேற்றும் செயலாற்றல் ஆகிய தொடர்பாக மதிப்பீட்டிற்கு உட்படுத்தல் இந்த கணக்காய்வின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

## 2.6 விடய பரப்பு வரையறுக்கப்படல்

கடைசி விருப்ப சாட்சியம் இல்லாத இருப்பினும் ஆதனங்கள் முகாமைத்துவம் தொடர்பான நிர்வாக உரிமங்கள் அதிகாரப் பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களிலே பொது நம்பிக்கைப் பொறுப்பாளரினால் அந்த மரணச் சொத்து உரிமையாளருக்கு உரிய நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற ஆதனப் பட்டியலின் பூரணத்தன்மையை உறுதி செய்வதற்காக சாட்சி பெறப்பட்டிருக்கவில்லை. என்பதுடன் அது தொடர்பான பரிசீலனைகளை மேற்கொள்வதற்கு முடியாதுள்ளது.

## 2.7 கணக்காய்வு மூலப்பிரமாணங்கள்

(அ) 1922 இன் 01 ஆம் இலக்க பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டளைச் சட்டம்.

(ஆ) மரணச் சொத்து உரிமையாளரின் கடைசி விருப்ப சாட்சிப் பத்திரம்.

(இ) மரணச் சொத்துக்களுக்கு உரிய வழக்கு தீர்ப்புகள்

(ஈ) 1993 இன் 6 ஆம் இலக்க சிவில் நடைமுறைக் கோவையின் ஏற்பாடு

(உ) 1950 இன் 09 ஆம் இலக்க காணிகள் கையகப்படுத்தும் சட்டம்

## 3. அவதானிப்புக்கள்

---

### 3.1 நிறுவன பின்புலம்

---

#### 3.1.1 எதிர்காலத் திட்டங்கள்

---

பொது நம்பிக்கைப் பொறுப்பாளரின் விடயப் பரப்பின் கீழ், மரணச் சொத்துக்கள் மற்றும் அறக்கட்டளை முகாமைத்துவம். கோயில்கள் நட்டயீடு மற்றும் வெளிநாட்டு நட்டயீட்டு விடுவிப்பு மாணவர் உதவி, வைத்திய உதவி, கதியற்றவனுக்கான உதவி, புண்ணிய உதவி, ஆகிய உதவி வழங்குதல் உள்ளடக்கப்படுகிள்றன. பல பிரிவுகளின் கீழ் பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு விடயங்கள் காட்டப்பட்டுள்ளதுடன். அந்த விடயங்கள் வினைத்திறனாகவும் மற்றும் ஆக்கபூர்வமாகவும் நிறைவேற்றப்படுவதற்காக திணைக்களத்தினால் உபாயகரமான திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டுமெனினும் அவ்வாறு இடம் பெற்றிக்கவில்லை. திணைக்களத்தினால் பெற்றுக் கொடுக்கப்படுகின்ற தகவல்களின் அடிப்படையில் 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் செயற்திறன் மட்டத்தில் காணப்படுகின்ற 110 மரணச் சொத்துக்களும் 1,112 நிதியங்களும் 239 வெளிநாட்டு நட்டயீடுகளும் 491 கோயில்கள் நட்டயீடும் காணப்பட்டதுடன் திறக்கப்படாத மற்றும் நிர்வாக உரிமங்கள் பெற்றுக் கொள்ளப்படாத 386 கடைசி விருப்ப சாட்சியங்கள் திணைக்களத்தில் மற்றும் நீதிமன்றங்களில் வைப்பிலிடப்பட்டிருந்தது.

திறக்கப்பட்ட மரணச் சொத்துக்கள் தீர்க்கப்பட்டு, நோக்கம் நிறைவேற்றப்படும் வரையான நடைமுறைகள் வரைக்கும் நிறைவேற்றப்பட வேண்டிய விடயங்களை அடையாளங்கண்டு அதற்காக கால பிரமாணங்களை மேற்கொண்டு நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக வினைத்திறனாக முன்வைப்பதற்காக நீண்டகால மற்றும் குறுங்கால திட்டங்களை தயாரித்து திறக்கப்படாத கடைசி விருப்ப சாட்சியங்களுக்குரிய கடைசி விருப்ப சாட்சியாளர்களின் தகவல்கள் காலத்திற்கேற்றவாறு நாளது வரையாக்கப்பட்டு வைத்திருக்கப்பட வேண்டியதன் அவசியத்தன்மை அவதானிக்கப்பட்டது. மேலும், கோயில்கள் நட்டயீடு மற்றும் வெளிநாட்டு நட்டயீடுகள் விடுவிக்கப்படுவதற்கு உரிய நட்டயீட்டு உரிமையாளர்களை அடையாளங்காணும் நடைமுறைக்காக காலக் கட்டுக்கோப்பின் அவசியத்தன்மை அவதானிக்கப்பட்டது. அதன்படி திணைக்களத்தின் நோக்கங்களுக்கு உரிய வேலைகளை நிச்சயித்து நிர்ணயம் செய்து அந்த வேலைகளின் பொறுப்புக்களை ஒப்படைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் அதற்காக செலவாகும் காலத்தை அடையாளங்கண்டு விபரமான செயல் நடவடிக்கைத் திட்டமொன்றை தயாரித்திருக்காததன் காரணமாக நோக்கங்களுக்கு அண்மிப்பது கடினமானதாக காணப்பட்டது.

### 3.1.2 தகவல் கட்டமைப்பு

-----------------------------

திணைக்களத்தினால் முகாமைத்துவம் செய்யப்பட்டு வரும் நிதியம் மற்றும் மரணச் சொத்துக்களுக்கு உரியதான செயற்படுகின்ற, செயற்படாத, தற்காலிகமாக மூடப்பட்டுள்ள தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய வழக்கு நடவடிக்கைகள் இடம் பெறுகின்ற நோக்கங்கள் நிறைவேற்றப்படுவதற்காக முன்வைக்கப்பட்டுள்ளதென்பனவும் கோயில்கள் மற்றும் வெளிநாட்டு நட்டயீடுகளுக்கு உரிய பயனாளிகளை இனங்காணுதல், கொடுப்பனவுகளின் முரண்பாடுகள் காணப்படுகின்ற செலுத்தி முடிக்கப்பட்ட ஆகிய என்பனவும் திணைக்களத்தின் வேலைகளை வினைத்திறனாக நிறைவேற்றுவதற்காக முறையான தகவல் கட்டமைப்பொன்றை நாளதுவரையாக பேணிச் செல்வதன் அவசியத் தன்மை அவதானிக்கப்பட்ட போதிலும், அவ்வாறான முறையான கட்டமைப்பொன்று காணப்படவில்லை. மேலும் புதிதாக பொறுப்பேற்கப்படுகின்ற கடைசி விருப்ப சாட்சியப் பத்திரம் தொடர்பாக கடைசி விருப்ப சாட்சிகாரரின் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் தங்கியிருப்போர் தொடர்பான விபரம் வருமான வரி கோவை இலக்கம், கிராம உத்தியோகத்தர் பிரிவின் பெயர் ஆகிய தகவல்கள் முறையாக பேணப்படாததனால் அந்த கடைசி விருப்ப சாட்சியங்கள் தொடர்பாக நடைமுறைப்படுத்துவதில் முரண்பாடான நிலைமை காணப்பட்டது.

முறையான தகலல் கட்டமைப்பொன்றை பேணியிருக்காததன் காரணமாக சரியான மற்றும் நாளது வரையான தகவல்களை பெற்றுக்கொள்வதில் வசதியீனங்கள் அவதானிக்கப்பட்டது.

உதாரணம்

(அ) கணக்காய்விற்கு வழங்கப்பட்ட மரணச் சொத்துக்களின் எண்ணிக்கை, செயல் நடவடிக்கைத் திட்டத்திலே குறிப்பிடப்பட்டுள்ள மரணச் சொத்தக்களின் எண்ணிக்கை மற்றும் வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மரணச் சொத்துக்களின் எண்ணிக்கைக்குமிடையில் வேறுபாடு காணப்படுதல்.

(ஆ) செயலற்ற மற்றும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ள மரணச் சொத்துக்கள் தொடர்பாக முறையான தகவல்கள் இல்லாமை.

(இ) கோப்புகள் காணாமல் போனதை அவதானித்தல்

(ஈ) மரணச் சொத்துக்கள் / அறக் கட்டளைகள் ஆரம்பித்த திகதி, நோக்கம் நிதிய ஸ்தாபகரின் தகவல்கள், கோவைகள் காணப்படுகின்ற பிரிவு தற்போதைய நிலைமை ஆகிய தொடர்பான தகவல்களை வசதியாக பார்க்கக்கூடிய முறைமையொன்று இல்லாமை.

(உ) ஒரு சில அறக்கட்டளைகள் தொடர்பாக நலனாளிகள் / அறக்கட்டளைகள் உருவாக்கிய நபரின் தகவல்கள் ஆகியன இல்லாமையினால் அறக்கட்டளையின் நோக்கம் நிறைவேற்றப்படாத சந்தர்ப்பம் காணப்படல்.

(பிரித்தானிய இலங்கை கம்பனிகள் அறக்கட்டளை ப்லோரன்ஸ் ஈநிட் விதம் மரணச்சொத்துக்கள்)

(ஊ) 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் வேலை நடவடிக்கைகளை ஆரம்பிக்காத 386 கடைசி விருப்ப சாட்சிகள் காணப்படுவதுடன் அதில் 1931 ஆம் வருடத்திலிருந்து 1992 ஆம் வருடம் வரையான காலப்பகுதியினள் 254 உம் மற்றும் 1992 ஆம் வருடத்திற்கு பின்னர் 132 உம் பொது நம்பிக்கை பொறுப்பாளருக்கு பொறுப்பளிக்கப்பட்ட கடைசி விருப்ப சாட்சிகளாகும். அந்த கடைசி விருப்ப சாட்சியாளர்கள் தொடர்பான தகவல்கள் முறையாக பேணப்பட்டு காலத்தோடு அவர்கள் தொடர்பான தகவல்களை நாளது வரையாக்கப்பட்டு கணக்கிடும் முறைமையொன்று திணைக்களத்தினுள் காணப்படவில்லை. அத்தோடு 1992 ஆம் வருடத்திற்கு முன்னர் வைப்புச் செய்யப்பட்ட கடைசி விருப்ப சாட்சிகள் தொடர்பாக நடைமுறைப்படுத்துவதற்காக 2018 ஆம் வருடத்திலே மாவட்ட செயலாளர் அலுவலகங்களில் மற்றும் பத்திரிகை விளம்பரத்தின் மூலம் தகவல்கள் கோரரப்பட்டிருந்ததுடன் அதன் போது இறந்து போன 50 பெர் மற்றும் சீவித்துக் கொண்டிருக்கின்ற 16 பேர் தொடர்பான தகவல்களை மாத்திரம் பெறக் கூடியதாக இருந்தது. தகவல்கள் கோரப்பட்ட 254 இல் 188 க்கு தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு முடியாததன் காரணமாக அந்த கடைசி விருப்ப சாட்சியங்களில் குறிப்பிடப்பட்டிருந்த நோக்கத்தை நிறைவேற்ற முடியாத நிலைமை அவதானிக்கப்பட்டது. 1992 ஆம் வருடத்திற்கு பின்னர் வைப்புச் செய்யப்பட்ட கடைசி விருப்ப சாட்சியங்கள் தொடர்பான தகவல்களை சேகரிப்பதற்காக எவ்வித திட்டங்களும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

இந்த பலவீனத்தின் காரணமாக நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக தேவையற்ற காலதாமதமொன்று ஏற்படுவதுடன் செயலாற்றல் மதிப்பீடு கடினமானதென்பது அவதானிக்கப்பட்டது.

### 3.1.3 பௌதீக வளங்கள்

------------------------------

திணைக்களத்தின் பிரதான அலுவலகம் நடாத்தப்பட்டு வருகின்ற கட்டிடம் டீ.பீ.ஜயதிலக்க மரணச் சொத்திற்கு உரிய கட்டிடமென்பதுடன் அலுவலகமொன்றை நடாத்திற் செல்வதற்காக போதுமான அளவு இடவசதி அதற்குள் இல்லை என்பது

அவதானிக்கப்பட்டது. பல வருடங்களாக பரிபாலன நடவடிக்கைகள் இடம் பெறாததன் காரணமாக கட்டிடத்தின் கூரை சேதமடைந்திருந்ததுடன் திணைக்களத்திற்கு சொந்தமான ஒரு சில பிரிவுகள் அருகிலுள்ள கட்டிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. மேலும் மின்சார கட்டமைப்பில் குறைபாடுகள் காணப்படுவது அவதானிக்கப்பட்டதுடன் 100 வருடங்களுக்கு அதிக வரலாற்றைக் கொண்ட இந்த கட்டிடம் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு அலுவலகம் நடாத்திச் செல்லல் அல்லது பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வேறு பொருத்தமான நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்துவதற்கு அல்லது அதன் மீது அவதானத்தை ஈடுபடுத்த வேண்டிய நிலையில் காணப்பட்டது.

### 3.1.4 மனித வள முகாமைத்துவம்

---------------------------------------

2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்ற, நிலையான மற்றும் வெற்றிட பதவியணியினர்கள் முறையே 87,69 மற்றும் 18 ஆக இருந்ததுடன் தினைக்களத்தின் வேலைகளை வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமான வகையில் நிறைவேற்றிக் கொள்ளக் கூடிய வகையில் பதவியணியினரின் தேவைவையை அடையாளங்காண்பதற்கும் பதவியணினரை முகாமைத்துவம் செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் பின்வருமாறு காணப்பட்டது.

(அ) திணைக்களத்திற்கான அத்தியாவசிய பதவியான நிர்வாக உத்தியோகத்தர் பதவி 2015 ஜுலையிலிருந்து வெற்றிடங்கள் காணப்படுவதுடன் மொழி பெயர்ப்பு பதவியும் 2016 ஜனவரியில் இருந்து வெற்றிடமாக காணப்பட்டது.

(ஆ) 2018 மே 21 ஆம் திகதி சட்ட உத்தியோகத்தர் பதவியொன்று அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும் அதற்காக உத்தியோகத்தரொருவரை உள்வாங்கியிருக்கவில்லை. விசாரணைப் பிரிவிற்காக சட்டம் சம்பந்தமான அறிவுள்ள உத்தியோகத்தர்களின் அவசியத்தன்மை அவதானிக்கப்பட்டிருந்ததுடன் உள்வாங்கக் கூடிய படிமுறைகளை தயாரிக்கும் போது அது தொடர்பான அவதானம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு மற்றும் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் தோட்டத்திற்காக உள்வாங்கப்பட்டுள்ள தோட்ட அதிகாரிகளுக்கு எழுத்து மூலமான வேலை பகிர்வு இடம் பெற்றிருக்கவில்லை. என்பதுடன் முறையாக மேற்பார்வையொன்று மற்றும் செயலாற்றலை அளவிடும் முறைமையொன்ற இல்லையென்பது அவதானிக்கப்பட்டது.

(ஈ) திணைக்களத்தின் வெவ்வேறு பிரிவுகளுக்கிடையில் உத்தியோகத்தர்களின் பொறுப்புக்கள் அடிக்கடி மாற்றப்படுதலும், அதன் போது முறையான வகையில் கோப்புக்கள் ஒப்படைத்தல் மற்றும் பெற்றுக் கொள்ளுதல் இடம் பெறவில்லை யென்பதுடன் இது தொடர்பாக பிரிவுத் தலைவரின் மேற்பார்வை குறைந்த மட்டத்தில் காணப்படுவதும் அவதானிக்கபட்டது.

(உ) 2018 ஜனவரி 24 ஆம் திகதிய மற்றும் 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்று நிருபத்தின் பிரகாரம் திணைக்களத்தின் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேற்றை அடைந்து கொள்வதற்கு பதவியணியினரிடம் காணப்பட வேண்டிய நிபுணத்துவம் மற்றும் தற்போது காணப்படுகின்ற நிபுணத்துவம் தொடர்பான மதிப்பீடொன்றை மேற்கொண்டு நிபுணத்துவ வீச்சை குறைத்துக் கொள்வதற்காக மனித வள அபிவிருத்தி திட்டமொன்றை தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டியிருப்பினும் திணைக்களத்தினால் அவ்வாறான திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

**3.1.5 நிர்வாக வியூகம்**

----------------------------

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(அ) திணைக்களத்தின் அமைப்பு வியூகத்தை தீர்மானிக்கும் போது நோக்கங்கள் வினைத்திறனாகவும் மற்றும் ஆக்கபூர்வமான வகையில் நிறைவேற்ற முடியுமான வகையில் அமைப்பு வியூகம் தயாரிக்கப்பட வேண்டியிருப்பினும் திணைக்களத்தினால் அவ்வாறு இடம் பெற்றிருக்கவில்லை.

(i) திணைக்களத்தின் மேல் முகாமைத்துவமான பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் பதவி மற்றும் பிரதி பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் பதவி இவ்விரண்டினதுமாக எப்பொழுதும் சட்டத்தொழில் முறையாளர்கள் நியமிக்கப்பட்டிருந்ததுடன் நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பாக சிரேஷ்ட தரத்திலான பதவியொன்று திணைக்கள பதவியணியினருள் காணக் கூடியதாக இருக்கவில்லை. அதனால் கோப்புக்களின் நிர்வாகம், அலுவலக முறைமையை அறிமுகப்படுத்தல், மேற்பார்வை ஆகிய நடவடிக்கைகளின் போது நாளது வரையாக்கப்பட்ட தகவல்களை பேணுதல். கணக்காய்வு உள்ளடங்களாக தகவல்களை பரிசீலிக்கும் தரப்பினருக்கு தாமதமின்றி தகலக்களை பெற்றுக்கொடுத்தல் ஆகிய பொறுப்புக்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோத்தர்களை இனங்காண்தல் தொடர்பான முரண்பாடுகள் அவதானிக்கப்பட்டது.

(ii) அதிகார பலம் மேலிருந்து கீழ் வரைக்கும் முறையாக பகிர்ந்து செல்லும் வகையில் அமைப்பு வியூகம் நிர்மாணிக்கப்பட வேண்டுமெனினும் தனிநபர் அறக்கட்டளை மற்றும் வெளிநாட்டு நட்டயீடு ஆகிய பிரிவுகளில் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளில் உத்தியோகத்தர்கள் காணப்பட்ட போதும் திணைக்களத்தின் தட்டச்சாளர் மற்றும் கணினி எழுதுவினைஞர் பதவிகள் வகிக்கும் உத்தியோகத்தர்கள் பிரிவுத் தலைவர்களாக நியமிக்கப்பட்டிருந்தது.

(iii) கோப்புகள் பதிவேடு பேணப்படுவதற்கான முறையான செயற்பாடொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. திணைக்களத்தினால் முகாமைத்துவம் செய்யப்படுகின்ற மரணச் சொத்துக்கள் பெரும்பாலும் 7 தசாப்தத்திற்கு அதிகமான காலத்திலிருந்து காணப்படுவதுடன் அந்த மரணச் சொத்துக்களுக்கு உரிய கடைசி விருப்ப சாட்சியங்கள், நிர்வாக உரிமங்கள் முக்கியமான வழக்குத் தீர்ப்புகள் காணிகளுக்குரிய உறுதிப்பத்திரங்கள், ஆகியன உள்ளடங்கலான கோப்புக்கள் பாதுகாப்பாக வைக்கப்படக் கூடியதாக முகாமைத்துவம் செய்யப்பட வேண்டிய போதிலும், அந்த கோப்புக்கள் பௌதீக பாதுகாப்பு தொடர்பான போதுமான அளவு நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. கோப்புக்கள் பதிவேட்டை பேணும் போது இடம் பெறுகின்ற பலவீனம், பொறுப்புக்களை ஒப்படைத்தலிலுள்ள பலவீனம், பொறுப்புகளை கைமாற்றும் போது இடம் பெறுகின்ற பலவீனம், பொறுப்புக்களை ஒப்படைத்தலிலுள்ள பலவீனம், பொறுப்புக்களை கைமாற்றும் போது முறையான வகையில் கோப்புக்களை ஒப்படைக்கும் பலவீனம் அவதானிக்கப்பட்டதுடன் கட்டிடத்திற்கு பௌதீக மட்டத்தில் இடம் பெற முடியுமான சேதங்களின் காரணமாக கோப்புக்களுக்கு சேதங்கள் இடம் பெறக்கூடிய அவதானம் தொடர்பாக அவதானத்தை மேற்கொண்டிருக்கவில்லை. இவ்வாறான பலவீனங்கள் காரணமாக கோப்புக்கள் காணமல் போன சந்தர்ப்பங்களோடு அத்தியாவசியமான தகவல்கள் கோப்புக்குள் இல்லாமல் போன சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) திணைக்களத்தின் அறக்கட்டளைகள் மற்றும் மரணச் சொத்துக்கள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதற்காக கணனிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு கட்டமைபொன்று நடாத்தப்பட்டிருந்தாலும், அதனுள் ஒவ்வொரு அறக்கட்டளை/மரணச் சொத்து தொடர்பான ஒரு லெஜர் கணக்கொன்று

(வருமானங்கள் மற்றும் செலவினங்கள் கணக்கொன்று) மாத்திரம் காணக்கூடியதாக இருந்தது.

(i) அந்த ஒவ்வொரு அறக்கட்டளை / மரணச் சொத்துக்களுக்கான முதலீடுகள் வங்கி மீதி உள்ளடங்கலாக ஏனைய மீதிகளுக்கான லெஜர் கணக்குகள் இல்லை என்பதுடன் ஒவ்வொரு அறக்கட்டளை / மரணச் சொத்துக்களுக்காக வெவ்வேறாக பரீட்சை மீதியொன்றை தயாரிக்க முடியாதனுள்ளனதாக அவதானிக்கப்பட்டது. அதனால் ஒவ்வொரு வருடத்தின் இறுதி தினத்தில் ஐந்தொகை மற்றும் வருமானங்கள் கூற்று பதிவேட்டு முறையில் (Manual) தயாரிக்கபடுவதுடன் தெரிவு செய்யப்பட்ட நியதிக்கு உரிய நிதிக்கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மற்றும் நிதிக்கூற்று தயாரிக்கபட்டிருந்தாலும் சில சொத்துக்கள் கணக்கிடப்பட்டிராத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது. விபரங்கள் இணைப்பு 01 இல் காட்டப்பட்டுள்ளது.

(ii) மேலும், நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்காக உபயோகப்படுத்தப்பட்ட கணக்கீட்டு கட்டமைப்பு (பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மூலதர்மங்கள் இலங்கை அரசப் பிரிவு கணக்கீட்டு நியமங்கள் என்பன) மற்றும் கணக்கீட்டு கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. நிலையான சொத்துக்களுக்கான தேய்மானக் கொள்கையொன்றை தீர்மானித்து தேய்மானங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும் அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஒவ்வொரு அறக் கட்டளை / மரணச் சொத்துக்களுக்கான முதலீடுகள் வெவ்வேறாக கண்டறியக் கூடிய வகையில் முறையாக பேணப்பட்ட முதலீட்டு பதிவேடொன்று இல்லாதிருந்ததுடன் சில பிரிவுகளில் காணப்பட்ட பதிவேடுகளில் அழிக்கும் நிறவத்தை பயன்படுத்தி திருத்தங்கள் மேற்கொண்டு தெளிவில்லாமல் குறிப்பிடப்பட்டிருநதமை காணக்கூடியதாக இருந்தது. இந்த திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதன் தொடர்பாக மேற்பார்வை உத்தியோகத்தரின் அவதானம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.2 மரணச் சொத்துக்களுக்கான ஆதனங்களை தீர்ப்பதற்கான நடைமுறைகள்

---

### 3.2.1 ஆதனங்களை அடையாளங் காணுதல்

---

பல்வேறு தரப்பினரின் ஆதனங்கள் தொடர்பாக பொது நம்பிக்கை பொறுப்பாளரை ஆதன முகாமையாளராக நியமிக்கப்பட்ட சந்தர்ப்பங்களிலே அந்த ஆதனங்களுக்கு உரிய அசையா மற்றும் அசையும் சொத்துக்களை அடையாளங் கண்டு சட்டபூர்வமான உரிமையை உறுதி செய்து கொள்ளல் பொது நம்பிக்கைப் பொறுப்பாளரின் பொறுப்பாகும். இருப்பினும் அந்த ஆதனங்கள் தொடர்பாக காணிகளை தீர்த்து வைத்தல் நடவடிக்கைகள் தொடர்பாக பரிசீலிக்கும் போது காணிகளை அடையாளங் காணுதல் மற்றும் தீர்த்து வைத்தல் நடவடிக்கைகள் திருப்திகரமான தரத்தில் இல்லாதிருந்தது அவதானிக்கப்பட்டது. தெரிவு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட ஆதனங்கள் சிலவற்றின் அவதானம் பின்வருமாறு காணப்பட்டன.

(அ) டி.எஸ்.டபிள்யூ சமரகோன் மரணச் சொத்துக்குரிய 141 ஏக்கர் 2 ரூட் 9.62 பேர்ச்சஸ் ஆன ரெஜிடேல் தோட்ட காணியின் 134 ஏக்கர் 1 ரூட் 25.92 பேர்ச்சஸ் 1964 ஆம் ஆண்டிலிருந்து 2001 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குள் அரசிற்கு பொறுப்பேற்கப்பட்டிருந்ததுடன் 1 ரூட் 2.62 பேர்ச்சஜ் நீதிமன்ற அனுமதியுடன் வரி அடிப்படையில் வெளி நிறுவனமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும் முழு காணியின் 6 ஏக்கர் 21.08 பேர்ச்சர்ஸ் மேலும் சேமிப்பாக காணப்பட வேண்டியிருப்பினும் ஆதனங்கள் தொடர்பாக நிர்வாக உரிமங்கள் 1960 நவம்பர் 09 ஆம் திகதியிலிருந்து 2020 ஜனவரியாகும் போது 60 வருடங்கள் கடந்திருந்தாலும் அது தொடர்பாக பரீசீலனையொன்றை மேற்கொண்டு உரிமைகளை உறுதிப்படுத்திக் கொண்டிருக்கவில்லை.

(ஆ) சமரகோன் மரணச் சொத்துக்களுக்காக 1973 ஒக்டோபர் 17 ஆம் திகதி திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆதனப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள சில வீடு, தோட்டம் மற்றும் வயல் காலிகள் பௌதீக மட்டத்தில் அடையாளங்கண்டு உரிமையை தீர்த்து கொள்வதற்கு திணைக்களம் தவறியிருந்தது. மேலும் அத்தினத்தின் பெறுமதி ரூபா 1,520,736 ஆன முதலீடு, வீட்டு உபகரணங்கள் மற்றும் வாகனங்களைக் கொண்ட அசையும் ஆதனங்கள் தொடர்பாகவும் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. அடையாளங் காணப்பட்ட ரூபா 63,100 பெறுமதியான வீடு, தோட்டம், மற்றும் வயல் பட்டியல் இணைப்பு 2 இல் காட்டப்பட்டுள்ளது.

(இ) திரு.ஹெரி ஹபுகொட அவர்களின் கடைசி விருப்ப சாட்சியத்தின் படி பத்தேகமவில் அமைந்துள்ள சுதுவெளிபொத்த தோட்டம் மற்றும் மத்தகவில் அமைந்துள்ள இரண்டு தோட்டக் காணிகள் தவிர எஞ்சியுள்ள காணிகள் பகுதிகளாக விற்கப்பட்டு அவரின் அறக் கட்டளைக்கு செலவு வைக்குமாறு குறிப்பிடப்பட்டிருந்ததுடன் 1961 மே 16 ஆம் திகதி இந்த மரணச் சொத்துக்கான நிர்வாக உரிமங்கள் பெறப்பட்டிருந்தது. கடைசி விருப்ப சாட்சியங்களுடன் காணப்பட்ட ஆதனங்களின் பட்டியலின் படி இந்த மரணச் சொத்துக்கு 138 காணித் துண்டுகள் காணப்பட்டதுடன் அதில் 35 ஏக்கர் 36.8 பேர்ச்சஸ் ஆன 17 காணித்துண்டுகள் தவிர திரு ஹபுகொட அவர்களுக்கு தீர்க்கப்பட்ட உரிமை காணப்பட்டதுடன் எஞ்சியுள்ள 121 காணித்துண்டுகள் விநியோகிக்கப்படாத காணிகளாகும். நிர்வாக உரிமங்கள் பெறப்பட்டு 58 வருடங்கள் கடந்திருந்தும் இந்த காணியை அடையாளங் கண்டு அளவீட்டு நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டு கடைசி விருப்ப சாட்சியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு காணிகளை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதற்கு திணைக்களம் தவறியிருந்தது. அதன்படி திரு ஹெரி ஹபுகொட அவர்களின் கடைசி விருப்ப சாட்சியத்தின் நோக்கமாக குறிப்பிடப்பட்டிருந்த இலங்கை பல்கலைக்கழகத்தின் மாணவர்ரொருவருக்கு மாணவர் உதவி வழங்குதல், தென் மாகாணத்தில் இடம் பெறுகின்ற இயற்கை இடர்களின் போது நிதி உதவி வழங்குதல் ஆகிய நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 3.2.2 அரசிற்கு சுவீகரிக்கப்பட்ட ஆதனங்கள் தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.

---

பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் நிறைவேற்றுபவராக நியமிக்கப்பட்டுள்ள சில மரணச் சொத்துக்களுக்கு உரிய காணிகள் அரசினால் அடிக்கடி சுவீகரித்துக் கொண்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் அவ்வாறான சந்தர்ப்பங்களிலே 1950 இன் 09 ஆம் இலக்க காணிகள் சுவீகரிக்கும் சட்டத்தின் 10 ஆவது பிரிவின் பிரகாரம் நட்டயீடு மற்றும் வட்டிப் பணத்திற்காக ஆதன உரிமையாளர் உரிமையைப் பெறுவார் அதனால் அந்த காணிகளுக்குரிய உரிமையை உறுதிப்படுத்தி பெறவேண்டிய நட்டயீட்டை அவசரமாக பெற்றுக்கொண்டு பொது நம்பிக்கை பொறுப்பாளரின் நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு அந்த பணத்தை ஈடுபடுத்தல் பொது நம்பிக்கைப் பொறுப்பாளரின் கடமையாகும். சில காணிகள் அரசிற்கு சுவீகரித்து போதுமான அளவு காலம் கடந்திருந்தாலும் உரிய நட்டயீடு மற்றும் வட்டிப் பணத்தை பெற்றுக் கொண்டு மரணச் சொத்தை மேம்படுத்தி மரணச் சொத்தாளரின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு தவறிய சந்தர்ப்பம் அவதானிக்கப்பட்டது. விபரம் பின்வருமாறு

(அ) டீ.எஸ்.டபிள்யூ சமரகோன் மரணச் சொத்துக்குரிய சைமன்டேல் தோட்ட காணியின் 16 ஏக்கர் 01 ரூட் 35 பேர்ச்சஸ் கொண்ட 01 ஆம் 02 ஆம் இலக்க துண்டுகள் 1982 ஆகஸ்ட் 27 ஆம் திகதி அரசு சுவீகரித்திருந்ததுடன் அதற்காக ரூபா 2,634,500 நட்டயீட்டுத் தொகையொன்று உரித்தாவதாக 1950 இன் 09 ஆம் இலக்க காணிகள் சுவீகரிக்கும் சட்டத்தின் 17 ஆவது பிரிவின் கீழ் தீர்மானிக்கப்பட்டு 2013 ஜனவரி 16 ஆம் திகதி கெஸ்பேவ பிரதேச செயலாளரினால் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் 2014 நவம்பர் 20 ஆம் திகதிய கெஸ்பேவ பிரதேச செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் திணைக்களத்திற்கு உரிய நட்டயீட்டுத் தொகை ரூபா 1,791,000 என குறிப்பிடப்பட்டிருந்தது. சுவீகரிக்கும் உத்தியோகத்தரினால் தெரியப்படுத்தப்படும் நட்டயீடு தொடர்பான தீர்மானம் சம்பந்தமாக திருப்தி அடைய முடியாவிட்டால் அந்த தீர்மானம் கிடைக்கப் பெற்று 21 நாட்களுக்குள் நட்டயீட்டு மீளாய்வுச் சபைக்கு முறையீடொன்றை சமர்பிக்க முடியுமெனினும் திணைக்களத்தினால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கபட்டிருக்கவில்லையென்பதுடன் இழக்கப்பட்ட நட்டயீடு சம்பந்தமான முரண்பாட்டை 2019 திசெம்பர் 31 ஆம் திகதியிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

பின்னர் அறிவிக்கப்பட்ட நட்டயீட்டுத் தொகையான ரூபா 1,791,000 வில் 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா 1,050,000 மாத்திரம் பெறப்பட்டிருந்ததுடன் எஞ்சிய தொகையான ரூபா 741,000 மேலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும், அதற்காக ரூபா 1,937,095 வட்டித் தொகையும் 2019 ஆகஸ்ட் 13 ஆம் திகதி கிடைத்த ரூபா 770,000 வுக்காக ரூபா 2,012,905 வட்டடித் தொகையும் 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் மேலும் திணைக்களத்திற்கு அறிடப்பட வேண்டிய காணப்பட்டது.

(ஆ) மேலே குறிப்பிடப்பட்ட மரணச் சொத்துக்குரிய மொரட்டுவை மத்தேபொட வயல் காணி என்ற காணி 1085/1 ஆம் இலக்க மற்றும் 1999 ஜுன் 21 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் காணிகள் சுவீகரித்தல் கட்டளைச் சட்டத்தின் 38(அ) உப ஏற்பாட்டின் கீழ் அரசு சுவீகரித்திருந்தது. 1.375 ஹெக்ரேயர் உள்ள இந்த காணி 8270 ஆம் இலக்கமுடைய காணித்துண்டின் மூலம் லொட் இலக்கம் 1,2,3,4 மற்றும் 5 என துண்டாக்கப்பட்டிருந்ததுடன் காணிகள் சுவிகரித்தல் கட்டளைச் சட்டத்தின் (460 ஆவது பந்தி) 10(1)(அ) பிரிவின் கீழ் விளம்பரப்படுத்தப்பட்டு லொட் இலக்கம் 1,2 மற்றும் 5 துண்டுகள் பொது நம்பிக்கைப் பொறுப்பாளரின் உரிமையை உறுதி செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 885,000 நட்டயீட்டுத் தொகையொன்று பெறப்பட்டிருந்தது. இருப்பினும் அதற்காக வர்த்தமானி

அறிவித்தல் விடப்பட்ட தினத்தில் இருந்து நட்டயீடு செலுத்தும் திகதி வரைக்குமான காலத்திற்காக நட்டயீட்டுத் தொகைக்கு மேலதிகமாக கிடைக்க பெற வேண்டிய நூற்றுக்கு 7 ஆன வருடாந்த வட்டியான ரூபா 841,827 யை அறவீட்டுக் கொள்வதற்கு 2020 ஜனவரி ஆகியும் திணைக்களம் மேற்கொண்டிருக்கவில்லை.

(இ) மேலே குறிப்பிடப்பட்ட மரணச்சொத்துக்குரிய ஒயகாவ வத்த, உடவத்த, கட்டு பொலயாவத்த வேவல என்ற காணியில் 4 ஏக்கர் 3 ரூட் 39 பேர்ச்சர்ஸ் 4 சந்தர்ப்பங்களில் அரசிற்கு சுவீகரிக்கப்படடிருந்ததுடன் அந்த ஆதனங்களுக்குரிய நட்டவீட்டுத் தொகையை பெற்றுக்கொண்டபடியாக திணைக்களத்திற்குள் சான்றுகள்எதுவும் இல்லையொன்பதுடன் அது தொடர்பாக பரிசீலனைகள் மேற்கொண்டு பெறப்படவேண்டிய தொகையாக இருந்தால் அதை மரணச் சொத்தின் பெயரில் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்ககைள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்காக நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கவில்லை.

| **காணி** | **சுவீகரிக்கப்பட்ட திகதி** | **சவீகரிக்கப்பட்ட திகதியில் கணக்கிலிடப்பட்ட நட்டயீட்டுத்தொகை** |
|---|---|---|
| 1 ஏக்கர் 1 ரூட் 0.05 பேர்ச்சர்ஸ் | 1973.09.22 | 40,000 |
| 1 ரூட் 0.03 பேர்ச்சர்ஸ் | 1974.12.13 | 22,103 |
| 1 ரூட் 3.8 பேர்ச்சர்ஸ் | 1977.01.28 | 31,500 |
| 1 ரூட் 36 பேர்ச்சர்ஸ் | 1989.05.13 | 1,225,000 |
| | | 1,318,603 |

(ஈ) சீ. ஈ. வனிகசூரிய மரணச் சொத்திற்கு உரியதாக காணப்பட்ட 2009 ஆம் வருடத்தின் அரச பாதுகாப்பு, மக்கள் பாதுகாப்பு சட்டம் மற்றும் அமைதி தொடர்பான அமைச்சிற்கு சுவீகரிக்கப்பட்டிருந்த கடவத்த, ஊரலிங்கணத்த என்ற 01 ஏக்கர் 2 ரூட் 24.18 பேர்ச்சர்ஸ் காணி அளவுக்குரிய வணிகசூரிய அறக்கட்டளைக்காக எவ்வித பிரதிபலனையும் பெற்றிருக்கவில்லை.

### 3.2.3 நீதிமன்ற தீர்ப்பை நடைமுறைப்படுத்தல்

-----------------------------------------------------------------

எல்லாவித மரணச் சொத்து தொடர்பாகவும் நடவடிக்கை மேற்கொள்ளும் பொறுப்பு நீதிமன்றத்தால் நிர்வாக உரிமங்கள் மூலமாக பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு வழங்கப்படுவதுடன் அவ்வாறான சந்தர்ப்பங்களில் அந்த மரணச் சொத்துக்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய முறைகள் அதில் உள்ளடக்கப்படுகிறது. அதன் படி அவ்வாறு நிர்வாக உரிமங்கள் வழங்கப்படாத மரணச்சொத்துக்கு உரிய ஆதனங்களை முகாமைத்துவம் செய்யும் உரிமை பொது நம்பிக்கை பொறுப்பாளருக்கு இல்லாத போதும் அ தற்கு எதிராக நடவடிக்கை மேற்கொண்ட சந்தர்ப்பம் அவதானிக்கப்பட்டது.

(அ) திருமதி. புஸ்பா ஹேவாவிதாரண நானயக்காரவின் ஆதனங்களை முகாமைத்துவம் செய்வதற்காக பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு நிர்வாக உரிமங்கள் வழங்கப்படாததுடன் அவரின் பெயரில் அறக்கட்டளையொன்றும் திணைக்களத்திடம் இல்லாத போதும் 2001 ஜுன் 28 ஆம் திகதியில் புஷ்பா ஹேவாவிதாரண நானயக்கார பெயரில் ரூபா 5,010,500 வெளித்தரப்பினரிடமிருந்து பெற்று முதலீடு செய்யப்பட்டிருந்தது. மூலதனத்திலிருந்து மீண்டும் செலுத்துதல் எனக் குறிப்பிட்டு 2011 திசெம்பர் 23 ஆம் திகதி ரூபா 4,000,000 மீண்டும் செலுத்தப்பட்டிருந்ததுடன் நிதியத்தை முகாமைத்தும் செய்யும் நோக்கமொன்று இல்லாதிருந்தாலும் அறக்கட்டளை நோக்கத்திற்காக செலுத்தப்பட்டதாக குறிப்பிட்டு 2002 செப்தெம்பர் 13 ஆம் திகதி ரூபா 1,500,000 மற்றும் 2002 ஜனவரி 31 ஆம் திகதி புண்ணிய உதவியாக ரூபா 221,075 செலுத்தப்பட்டிருந்தது. 2019 நவம்பர் 24 ஆம் திகதியில் ரூபா 190,782 வங்கி மீதியும் நிலையான வைப்புக்களில் ரூபா 1,700,194 முதலீடும் காணக்கூடியதாக இருந்தது.

(ஆ) மனோஹாரி சுனில் காந்தி மடுகல்ல என்ற மந்த மனநிலை பெண் நபரொருவரின் பொறுப்பாளராகவும் மற்றும் முகாமையாளராகவும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பொது நம்பிக்கை பொறுப்பாளரினால் 2014 ஜுன் 30 ஆம் திகதி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்திலே இடம்பெற்ற வழக்குக்கு உரிய இணக்கப்பாட்டை தெரிவித்து இருந்து இருப்பினும் அது தொடர்பான வழக்கு அறிக்கையின் கட்டளை அல்லது முகாமைத்துவ சான்றிதழின் மூலம் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. அப்படி இருந்தாலும், ஆதன உரிமையாளரான அந்த பெண்ணுக்கு சொந்தமான குருநாகல் மாவட்டத்தின் ஹிரியால ஹத்பத்துவின் அறுபத்தாறாவது கோரலேயில் அமைந்துள்ள பீல்பொத்த என்ற பெயருடைய 25 ஏக்கர் 3 ரூட் விளைச்சல் தரையினைக்

கொண்ட வயல் மற்றும் தரை காணிகளை முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காக திணைக்களம் தொடர்பட்டிருந்தது. இந்த ஆதனத்தின் கிழ் பங்குத் தொகையாக ரூபா 322,715 சேகரிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 110,870 வை சட்ட கட்டணங்கள், போக்குவரத்துச் செலவு உள்ளடங்களாக பல்வேறு செலவுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் 2019 ஆகஸ்ட் 07 ஆம் திகதி சேமிப்பு மீதியான ரூபா 211,846 முதலீடு செய்யப்படடிருந்தது.

### 3.2.4 சட்ட மற்றும் பிரமாண ரீதியான உதவியைப் பெற்றுக்கொள்ளல்

---

விபரம் கீழுள்ளவாறு

(அ) திணைக்களத்தில் வைப்புச் செய்யப்பட்டுள்ள கடைசி விருப்ப சாட்சியத்திற்குரிய தெஸ்தமோனிய வழக்கு மற்றும் மரணச் சொத்து தொடர்பாக ஏனைய சட்ட முரண்பாடுகளை தீர்த்து வைத்தல் மற்றும் நீதிமன்றத்திற்கு ஈடுபடுத்துவதற்கு தேவைப்படுவதுடன் அவ்வாறான சந்தர்ப்பங்களில் பொது நம்பிக்கை பொறுப்பாளரின் விருப்பத்தின்படி வழங்கறிஞர்களை தெரிவு செய்து கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல் திணைக்களத்தின் சாதாரண நடைமுறையாக காணப்பட்டது. இந்த திணைக்களத்தின் சுபாவம் மற்றும் வேலைகளின்படி எப்பொழுதும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு ஈடுபடுவதற்கு தேவைப்படுவதுடன் திணைக்களத்திற்காக சட்ட உத்தியோகத்தர்களின் தேவை காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. அதனால் வருடாந்தம் வழக்கறிஞர் சபை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு அவசியத்தன்மைக்கேற்ப மிகவும் தகுதியான வழக்கறிஞர்கள் அந் சபையிலிருந்து தெரிவு செய்து அவரின் ஊடாக நீதிமன்ற நடவடிக்கைகள் மிகவும் வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக நிறைவேற்றப்பட வேண்டியிருப்பினும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு வழக்கறிஞர்களை நியமித்து நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்ததுடன் அதன்படி கட்டணங்களில் முரண்பாடுகள், அந்த சம்பவங்கள் தொடர்பாக உரிய வழக்கறிஞர்கள் காட்டுகின்ற அக்கறை போன்ற விடயங்கள் காரணமாக அந்த முரண்பாடுகள் தொடர்பாக கிடைக்கப்பெறுகின்ற தீர்மானங்களுக்கு அது கட்டாயப்படுத்தலாக அமைந்திருந்தது.

(ஆ) நீதிமன்ற நடவடிக்கைகள் மற்றும் அது தொடர்பான வழக்கறிஞர்களின் ஒப்படை தொடர்பான எழுத்து மூல இணக்கப்பாடுகளின்றியும் வழக்கறிஞர்களின் கட்டணங்களை செலுத்தும் போது முன்பு தீர்மானிக்கப்பட்ட கட்டணங்கள் அல்லது கட்டண வீச்சிற்குள் கொடுப்பனவுகள் றேம்கொள்ளப்படாததுடன் பொது நம்பிக்கை பொறுப்பாளரின் விருப்பத்திற்கேற்ப கொடுப்பனவுகள்

மேற்கொள்ளப்பட்டிருந்தன. மேலும் நீதினமற் நடவடிக்கைகளுக்காக செலவுகளை மேற்கொள்வதற்காக மரணச்சொத்துக்களின் சொத்துக்களை உபயோகப்படுத்தியிருந்ததுடன் ஒரு சில தெஸ்தமோனிய வழக்கு நடவடிக்கைகளுக்காக மரணச் சொத்துக்களின் சொத்துக்களை பயன்படுத்துவதற்கான அதிகாரம் இல்லாத சந்தர்ப்பங்களில் மற்றும் ஒருசில மரணச்சொத்துக்கள் வரவு மீதியை கொண்டிருக்கும் சந்தர்ப்பஙகளிலே வேறு மரணச்சொத்துக்களில் இருந்து செலவுகளை மேற்கொள்ளுதல் இடம்பெறுவதாக அவதானிக்கப்பட்டது.

உதாரணம் :

(i) பொது நம்பிக்கைப் பொறுப்பாளரின் பொறுப்பிலுள்ள பாதுகாப்பு பெட்டகத்தில் வைப்புச் செய்யப்பட்டுள்ள 254 கடைசி விருப்ப சாட்சிகளை தறத்தல் மற்றும் அது தொடர்பான சட்ட நடவடிக்கைகளுக்காக டீ.எஸ்.டபிள்யூ சமர கோன் மரணச்சொத்திலிருந்து 2018 ஆம் வருடத்திலலே ரூபா 2,629,250 பயன்படுத்தப்பட்டிருந்ததன் காரணமாக அந்த மரணச் சொத்துக்களின் சொத்துக்களில் முறைக்கேடு இடம்பெற்றிருந்தது. மேலும் இந்த பணம் சமரகோன் மரணச்சொத்தின் பெயரில் பெறப்பட வேண்டிய பணமாக அடையாளங்கண்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ii) என்.டீ.ஏ.சில்வா விஜேசிங்க மரணச்சொத்தில் வரவு மீதி காணப்பட்ட போது 2017 ஆம் வருடத்திலே ரூபா 272,475 வும் 2018 ஆம் வருடத்திலே ரூபா 1,181,500 வும் சட்டச்செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இது எந்த மரணச்சொத்திற்கு செலுத்தப்பட வேண்டிய செலவாகவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(iii) ஸ்ரீமா இந்திராணி த. சொய்சா மரணச்சொத்திலும் 2017 மற்றும் 2018 வருடங்களிலே வரவு மீதி காணப்பட்ட போதும் வழக்கறிஞர் கட்டணமாக முறையே ரூபா 73,220 மற்றும் ரூபா 81,750 செலுத்தப்பட்டிருந்தது.

### 3.3 மரணச்சொத்து ஆதனங்களின் முகாமைத்துவம்

#### 3.3.1 மரணச்சொத்துத்தாளர்களின் நோக்கங்களுக்கு இணங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

ஒரு நபரின் ஆதனம் உரிய நிர்வாக உரிமங்கள் பொது நம்பிக்கை பொறுப்பாளருக்கு வழங்கப்பட்ட பின்னர்அந்த ஆதனத்தின் உரிமையாளரின் கடைசி விருப்ப சாட்சியத்தில் குறிப்பிடப்பட்டிருந்த நோக்கம் வினைத்திறனாகவும் மற்றும் ஆக்கபூர்வமாகவும் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டியபோதிலும் கடைசி விருப்பசாட்சியத்தில் குறிப்பிடப்பட்டிருந்த நோக்கம் நிறைவேற்றப்படாமல் மற்றும் நோக்கத்திற்கு முரணாக விடயங்கள் இடம்பெற்ற சந்தர்ப்பம் இடம்பெற்றுளது. அதன் காரணமாக மரணச்சொத்தின் சொத்துக்கள் முறைக்கேடாகவும், வளங்கள் மற்றும் காலம்விரயமாவதன் காரணமாக மரணச்சொத்தாளர்களின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்படாமை அவதானிக்கப்பட்டது.

(அ) 2007 ஏப்ரல் 14 ஆம் திகதி காலஞ் சென்ற திருமதி ஸ்ரீமா இந்துராணி த சொய்சா விக்கிரமசிங்க அவர்களின் 2002 ஒக்டோபர் 2 ஆம் திகதிய 4115 ஆம் இலக்க கடைசி விருப்ப சாட்சியத்தின் படி ''ஒலிவர் த சில்வா அறக்கட்ளை'' பெயரில் அறக்கட்டளையொன்றை ஆரம்பித்து ஆதனங்கள் தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய விதம் குறிப்பிடப்பட்டிருந்தது. 2009 செப்தெம்பர் 20 ஆம் திகதி நிர்வாக உரிமங்கள் பொது நம்பிக்கை பொறுப்பாளருக்கு வழங்கப்படடிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் 10 வருடங்கள் கடந்திருந்தாலும் சாட்சி விருப்ப சாட்சியத்தின் விருப்பத்திற்கு முரனான விடங்கள் இடம்பெறுதல் காரணமாக அறக்கட்ளையொன்றை உருவாக்குதல் உள்ளடங்களாக மரணச் சொத்தாளரின் நோக்கம் எதுவும் அடையப்பெற்றிருக்கவில்லை. இந்த மரணச் சொத்து ஆதனத்திற்கு உரிய அவதானம் பின்வருமாறு உள்ளது.

(i) ஹைலெவல் வீதி நுகேகொட 151/பீ இலக்க வீட்டை தா்மவிஜய மன்றத்திற்கு அந்த வீட்டின் பொருட்கள் மற்றும்வீட்டு உபகரணங்கள் தா்மவிஜய மன்றம் ஊடாக தேவையுள்ள குடும்பங்களுக்கு மற்றும் பொருளாதார வசதியற்ற கிராமங்களுக்கு வழங்குதல் மரணச் சொத்தாளரின் எதிர்பார்ப்பாக இருந்தாலும் 2009 ஆகஸ்ட் மாதத்திலே அப்போது திணைக்களத்திலே சேவையாற்றும் பெண் உத்தியோகத்தருக்கு தனிப்பட்ட தீர்மானத்தில் பொது நம்பிக்கைப்

பொறுப்பாளரினால் உடன்படிக்கை மற்றும் வாடகைக் கட்டணம் எதுவுமின்றி குடியிருப்பதற்காக வீடு வழங்கப்பட்டிருந்தது. அந்த பெண் உத்தியோகத்தர் 2015 ஒக்டோபர் 16 ஆம் திகதி விளையாட்டு அமைச்சின் சேவைக்காக பொது நம்பிக்கைபொறுப்பாளர் திணைக்களத்தினால் விடுவிக்கப்பட்டிருந்தாலும் அந்த சேவையில் விடுவிக்கப்படுவதற்கு முன்னர் உரிய ஆதனங்களை மீண்டும் கைப்பற்றிக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கவில்லை. வீட்டை மீண்டும் பெற்றுக்கொள்வதற்காக 2016 ஆகஸ்ட் 09 ஆம் திகதி நுகேகொடை மாவட்ட நீதிமன்றத்தில் 629/2016 ஆம் இலக்க காணிகள் வழக்கு திணைக்களத்தினால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் 2020 ஜனவரியிலும் நடவடிக்கைகள் நிறைவடைந்திருக்கவில்லை.

(ii) மேலும் மரணச்சொத்திற்கு உரிய 300-5220 ஆம் இலக்கமுடைய நிஸான் மார்ச் வகையைச் சேர்ந்த மோட்டார்வாகனத்தை விற்று பெறப்படுகின்றன பணம். தங்கம் மற்றும் ஏனைய முதலீடுகளையும் தர்மவிஜய மன்றத்திற்கு பெற்றுக் கொடுக்குமாறு கடைசி விருப்ப சாட்சியத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன்படி எவ்வித சொத்துக்களும் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லையென்பதுடன் வாகனத்தை விற்று பெற்ற தொகையான ரூபா 700,800 வும் 2016 ஜனவரி 01 ஆம் திகதியில் இருந்து நிலையான வைப்புக் கணக்கில் வைப்புச் செய்து திணைக்களத்தினுள் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

(iii) நோக்கத்தை நிறைவேற்றாததன் காரணமாக தர்மவிஜய மன்றத்தினால் பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை மரணச் சொத்தின் வழக்கு நடவடிக்கைகளுக்காக ரூபா 662,825 சட்டச் செலவுகளாக செலவு செய்யப்பட்டிருந்தது. 2019 திசெம்பர் 10 ஆம் திகதியில் மரணச் சொத்துக் கணக்கில் ரூபா 610,230 வரவு மீதியொன்று அவதானிக்கப்பட்டதுடன் மரணச் சொத்துக் கணக்கில் வரவு மீதியின் பொருட்டு கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியாததனால் 2019 ஆம் ஆண்டிலே ரூபா 50,000 ஆன வழக்கறிஞர் கட்டணம் வேறு மரணச் சொத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. 2019 திசம்பர் 31 ஆம் திகதியில் ரூபா 110,250 செலுத்தப்பட வேண்டிய வழக்கறிஞர் கட்டணமொன்றும் காணப்பட்டது.

(iv) மேற்கூறப்பட்ட விடயங்களின் காரணமாக பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் அந்த ஆதனங்களின் பாதுகாப்பாளராக நியமிக்கப்பட்டு மரணச் சொத்து உரிமையாளரான அந்த பெண்மணி எதிர்பார்த்த நோக்கங்கள் எதுவும் 10 வருட காலங்கள் கடந்திருந்தும் நிறைவேற்றுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஆ) திரு தொன் சைமன் விஜேவிக்ரம வினால் 1950 பெப்ரவரி 10 ஆம் திகதி எழுதப்பட்ட 3911 ஆம் இலக்க கடைசி விருப்ப சாட்சியத்தின் 8 ஆவது பிரிவின் பிரகாரம் பிலியந்தலை நகரத்தில் நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்ட வைத்தியசாலையில் வார்ட் ஒன்றை நிர்மாணிப்பதற்கும் அதில் அவரின் காலஞ்சென்ற தாயின் பெயரில் பெயரிடுவதற்கும் பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு சாட்டப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான வார்ட் ஒன்றை பிலியந்தலை ஆதார வைத்தியசாலையில் நிர்மாணிப்பதற்கு பதிலாக ரூபா 1,014,275 பெறுமதியான வைத்திய உபகரணங்கள் நன்கொடையாக வழங்கல் மாத்திரம் நிறைவேற்றப்பட்டடுள்ளதாக வைத்தியசாலையில் பெறப்பட்ட அறிக்கையின் படி உறுதி செய்யப்பட்டது.

(இ) 1968 ஆகஸ்ட் 11 ஆம் திகதி இறையடி சேர்ந்த திருமதி புலோரன்ஸ் ஈனிட் விதம் அவர்களின் மரணச் சொத்துக்கு உரித்தான ஆதனங்களை விற்று பெறப்படுகின்ற பணத்தை நலானாளிகளுக்கு கொடுப்பனவை மேற்கொள்வதற்காக அட்டோனி தத்துவகாராக பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் நியமிக்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு ஆதனங்களை விற்று பெறப்ப்ட்ட பணத்தில் ரூபா 8,081,281 வை அந்த விடயங்களுக்கு அப்பால் வேறு விடயங்களுக்கு செலவு செய்வதற்காக உபயோகிக்கப்பட்டிருந்தது.

(ஈ) நுகேகொடை ரேமன்ட் வீதி 49 ஆம் இலக்கமுடைய ஸ்தானத்தில் வாழ்ந்த 1982 ஏப்ரலில் 08 ஆம் திகதி இறையடி சேர்ந்த திரு ஜீ.எஸ்.ஜயசூரிய அவர்களின் மரணச் சொத்துக்கள் தொடர்பாக நிறைவேற்றபவராக 1982 நவம்பர் 09 ஆம் திகதிய நிர்வாக உரிமங்கள் மூலமாக பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் நியமிக்கப்பட்டிருந்தார். கடைசி விருப்ப சாட்சியத்தின் நோக்கமாக பெல்லன்வில ரஜமஹாவிகாரை மற்றும் இரத்மலான சொய்சாராமய ஆகிய விகாரைகளுக்கான மின்சாரப்பட்டியல் கொடுப்பனவாக மாதாந்தம் ரூபா 500 வை பெற்றுக்கொடுத்தல், "George Stephen Jayasuriya Memorial Scholarship for Chemistry" மற்றும் "Muhandiram Charles Jayasuriya Memorial Scholarship for

Mathematics" ஆகிய பெயர்களில் இரண்டு புலமைப்பரிசில்களை ஆரம்பித்து மருதாணை ஆனந்த வித்தியாலயத்தின் சிங்கள பௌத்த பிள்ளைகள் இருவருக்கு பல்கலைக்கழக கல்விச் செயற்பாடுகள் முடிவடைந்து பட்டததைப் பெறும் வரைக்கும் மாதாந்தம் ரூபா 250 வீதம் செலுத்துதல் மற்றும் இலங்கை புற்றுநோய் சங்கத்திற்கு மற்றும் இராஜகிரியில் விக்டோரியா வீட்டில் வசிக்கின்ற குணப்படுத்த முடியாத நோயாளிகளுக்காக மாதாந்த உதவித்தொகையொன்றை செலுத்துதல் காட்டப்பட்டிருந்தது.

1950 மே 14 ஆம் திகதி மற்றும் 1531 ஆம் இலக்கமுடைய உறுதிப்பத்திரத்தின் மூலம் திரு ஜயசூரிய அவர்களின் காலஞ்சென்ற முதலாவது மனைவிக்கு உரித்துடைய இரத்மலானை லேட் கெதரின் தோட்டம் என்ற காணி, காணிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு சுவீகரிக்கப்பட்டிருந்ததுடன் காணியின் நட்டயீட்டு உரிமைக்காக பொது நம்பிக்கைப் பொறுப்பாளரினால் விண்ணப்பிக்கப்பட்டிருந்தது. துணையாளர் இரண்டாவது திருமணத்திற்கு முற்பட்டால் ஆதனங்கள் தொடர்பாக எவ்வித உரிமையும் துணையாளருக்கு கிட்டாது என 1531 உடைய உறுதிப்பத்திரத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருந்தது. திரு ஜயசூரிய அவர்கள் இரண்டாவது திருமணத்திற்கு முனைந்திருந்ததுடன் காணி தொடர்பான உரிமை இல்லாத போது காணியின் நட்டயீட்டு உரிமைக்காக விண்ணப்பித்தன் காரணமாக 2000 ஆம் அண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை வழக்கறிஞர் கட்டணமாக ரூபா 2,962,430 செலவிடுவதற்கு நேர்ந்துள்ளது. மேலும் 2019 ஒக்டோபர் 23 ஆம் திகதியுடைய 522/00 விஷேட இலக்கமுடைய வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் அந்த ஆதனத்திற்குரிய நட்டயீட்டுத் தொகையை பெற்றுக்கொள்ளும் சட்டபூர்வமான உரிமை பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு இல்லை என்பதாக தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. இதனால் உரிமையில்லாத ஆதனத்திற்காக தேவையில்லாமல் காலம் மற்றும் மரணச் சொத்தின் முதலீட்டு வருமானத்தை ஈடுபடுத்தியதன் காரணமாக 2010 ஆண்டு தொடக்கம் மேலே குறிப்பிடப்பட்டிருந்த மரணச் சொத்தின் எவ்வித நோக்கங்களும் நிறைவேற்றுவதற்கு முடியாது போயிருந்தது.

(உ) வீரசிங்க அபேநாயக்க மரணச் சொத்துக்கு உரிய மேல் கிருவாபத்துவே பொல்மொடே கிராமத்தில் அமைந்துள்ள மோதரமுனேயாய மற்றும் கந்துருகஸ்வேகட என்ற 31.2124 ஹெக்ரெயர் அளவுள்ள ஒன்றினைந்த காணியில் 31.0287 ஹெக்ரெயர் அரசிற்கு சுவீகரிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக 2012 மாாச் 06 ஆம் திகதி ரூபா 16,500,000 தொகை திணைக்களத்திற்கு கிடைத்திருந்தது. அந்த நட்டயீட்டுத் தொகை வீரசிங்க அபேநாயக்க

அறக்கட்டளை என்ற பெயரில் அடையாளங் காணாமல் பொது முதலீட்டு கணக்கில் வைப்புச் செய்யப்பட்டதால் 2012 ஆம் ஆண்டில் இருந்து 2015 மார்ச் வரையான காலத்திற்குள் வட்டிப்பணம் ரூபா 4,516,050 வீரசிங்க அபேநாயக்க அறக்கட்டளையிலிருந்து இழக்கப்பட்டிருந்தது. அறக்கட்டளையிலிருந்து இழக்கப்பட் பணத்தை பொது முதலீட்டுக் கணக்கிலிருந்து அறவிட்டு அறக்கட்டளையின் நோக்கம் நிறைவேறும் வண்ணம் அறக்கட்டளையின் பெயரில் வைப்புச் செய்வதற்கு திணைக்களம் நடவடிக்கை மேற் கொண்டிருக்கவில்லை. என்பதுடன் அந்த பெறப்பட வேண்டிய வட்டியை கணக்கிலிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) திரு ஹெரி ஹபுகொட அவர்களின் கடைசி விருப்ப சாட்சியத்தின் பிரகாரம் ஒவ்வொரு வருடமும் மரணச் சொத்தின் வருமானத்தின் 1/5 பங்கு சேமிக்கப்பட வேண்டுமென்றும் அந்த சேமிப்பு ரூபா 100,000 ஆகும் பொது அதில் மாணவ உதவிகளை வழங்கவும் மற்றும் இடர் நிலைகளின் போது உதவி வழங்குவதற்காக சேகரித்து வைத்திருக்க வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அப்படியிருந்தும் மரணச் சொத்தில் அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக திணைக்களத்தினால் வருமானத்தை சேமித்து வைத்தருக்கவில்லை. 2015 ஆம் வருடத்திலிருந்து 2019 ஆம் வருடம் வரையான 05 வருட காலத்திலே ரூபா 24,865,439 வருமானம் ஈட்டியிருந்ததுடன் அதில் ரூபா 4,973,088 வை சேமித்து முதலீடு மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும் அவ்வாறு சேமிக்கப்பட்டிருக்கவில்லை. விபரம் இணைப்பு 04 இல் காட்டப்பட்டுள்ளது.

(எ) திரு நிஹால் பீரீஸ் அவர்களின் மரணச் சொத்துக்கு உரித்தான இரத்மலான இரண்டாம் ஒழுங்கை 57 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள வீட்டை 2007 ஆம் ஆண்டில் சிறிய திருத்த வேலைகளை மேற்கொண்டு குத்தகைக்கு வழங்கக் கூடிய வல்லமை காணப்படுவதாக தீர்மானித்திருந்த போதிலும் அவ்வாறு இடம் பெறாத காரணத்தினால் 2013 ஆம் வருடத்திலே திருத்த வேலைகளின் மதிப்பீடு ரூபா 4,202,772 ஆக காணப்பட்டது. மரணச் சொத்தில் அவ்வாறான தொகையொன்று இல்லாததால் 2015 ஆம் வருடத்திலே ரூபா 22,500,000 வுக்கு மதிப்பிடப்பட்டு விற்பதற்காக 2016 ஆம் வருடத்திலே நீதிமன்ற அனுமதியை கோரி இருந்தது. மீண்டும் 2018 ஆம் வருடத்தில் இரத்மலானை பிரதேச செயலாளர் அலுவலகத்தினால் ரூபா 2,623,800 வுக்கு திருத்த வேைல மதிப்பீடொன்றை பெற்றிருந்த போதிலும் திருத்த வேலை நடவடிக்கைகள் இடம் பெற்றிருக்கவில்லை. திருத்தங்களை மேற்கொண்டு வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்கு அல்லது நீதிமன்ற அனுமதியைப் பெற்றுக்கொண்டு

விற்பனை செய்தல் ஆகிய இரண்டு சந்தர்ப்பங்களில் நிச்சயித்த தீர்மானத்திற்கு முனைவதற்கு முடியாததன் காரணமாக 2019 ஆம் வருடம் வரைக்கும் ஆதனம் விளைவற்று காணப்பட்டது. அத்தோடு மரணச் சொத்தை பொருத்தமான முறையில் அபிவிருத்தி செய்து நலனாளிகளின் நலன்புரி சேவைகளுக்கு ஈடுபடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(ஏ) நாணாயக்கார ரஜவாசல அப்புஹாமிலாகே தொன் ஆதர் சில்வா விஜேயசிங்க சிரிவத்தன என்ற பெயருடைய களுத்துறை தெற்கு ரிச்மன்ட் பங்களாவில் இருந்த படிகார முதலியார் தனது கடைசி விருப்ப சாட்சியத்தில் போது நம்பிக்கை பொறுப்பாளரை தமது மரணச் சொத்தின் நிர்வாக உரிமைக்காராக நியமித்து 1947 ஜுலை 08 ஆம் திகதி இறையடி சேர்ந்திருந்ததுடன் 1947 ஜுலை 30 திகதியிலிருந்து மரணச் சொத்தின் பாதுகாவலராக பொது நம்பிக்கை பொறுப்பாளரிடம் காணப்பட்டது.

உதவியற்ற இலங்கையின் ஆண் பிள்ளைகளுக்காக ‘‘சில்வா விஜேயசிங்க தேசிய பிள்ளைகளின் வீடு’’ என்ற பெயரில் வீடொன்றை உருவாக்கி கல்வியின் ஊடாக கிடைக்கும் பயிற்சியன் மூலம் நல்ல பிரசையாக மாறுவதற்கு பிள்ளைகளின் வாழ்க்கையை மேம்படுத்துதல் மற்றும் இங்கிலாந்தின் பேராசிரியர் பர்நாடோனின் வீட்டை எடுத்துக்காட்டாகக் கொண்டு தேசிய தேவைப்பாடுகளுக்கு உகந்த வகையில் உருவாக்கி நடாத்திச் செல்லல் மரணச் சொத்தாளரின் பிரதான நோக்கமாக காணப்பட்டது. அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக கடைசி விருப்ப சாட்சியத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்த ஆதனங்களான ரிச்மன்ட் பங்களாவில் அமைந்துள்ள இறப்பர் மற்றும் தெங்குச் செய்கையுடனான 42 ஏக்கர் நிலத்தின் வருமானம் மற்றும் கம்பஹா மாவட்டத்தின் ஹேனேகமவில் அமைந்துள்ள ‘‘இரஹந்தயாவ’’ என்ற பெயரிலுள்ள 81 ஏக்கர் தெங்கு தோட்டத்தில் கிடைக்கும் வருமானத்தையும் ஈடுபடுத்த வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது.

(i) ‘‘சில்வா விஜேயசிங்க தேசிய பிள்ளைகளின் வீடு’’ என்ற பெயரில் பிள்ளைகளுக்கான வீடொன்று உருவாக்கப்பட்டிருந்ததுடன் தற்போதைக்கு அங்கு 8 ஆண் பிள்ளைகள் இருப்பதாக அவதானிக்கப்பட்டது. விடுதி உடைந்து காணப்படுதல் மற்றும் மதில்கள் வெடிப்புக்குள்ளாகியிருத்தல் காரணமாக 2019 செப்தெம்பர் மாத்திலிருந்து தற்காலிகமாக உணவுச் சாலைக்கு அண்மையில் அமைந்துள்ள ஒரு சில அறைகளை பிள்ளைகளை தங்குவதற்கான வசதிகள் ஏற்படுத்தி

கொடுக்கப்பட்டிருந்தது. இந்த விடுதி 2014 ஆம் வருடத்திலே நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் கூரைக்காக சக்தியில் குறைந்த பலகை (பன்னீர் ஜம்பு பலகை) ஈடுபடுத்தப்பட்டிருந்தாக அவதானிக்கப்பட்டிருந்ததுடன் 2019 திசெம்பர் ஆகும் போதும் அவர்களின் மாணவர் விடுதி திருத்தங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் இடம் பெற்றறிருக்கவில்லை. அதனால் மரணச் சொத்தாளர் எதிர்பார்த்த பிரதான நோக்கம் போதுமான அளவு நிறைவேற்றப்படவில்லை. என்பது அவதானிக்கப்பட்டது.

(ii) பங்களாவின் கூரை உடைந்து சிதைவடைந்து காணப்படுகின்றதன் காரணமாக 100 வருடங்களுக்கு அதிகமான வரலாற்றைக் கொண்ட புராதன முக்கியத்துவம் வாய்ந்த இந்த பங்களாவின் பெரும்பாலான இடங்கள் உடைந்து விழும் நிலையிலும் படிக்கட்டுக்கள் மற்றும் பங்களாவின் பார்வையாளர்கள் கூடம் என்பன நடந்து செல்வதற்கான பாதுகாப்பற்றதாகவும் அதனால் சில இடங்களை பார்வையிடும் நடவடிக்கைகளுக்காக வரையறைக்குபடுத்தியிருப்பதாகவும் அவதானிக்கப்பட்டிருப்பதுடன் துரிதமாக திருத்தங்களை மேற்கொள்ள வேண்டிய அவசியத் தேவைகள் அவதானிக்கப்பட்டது. இந்த பங்களாவுக்குகாக சென்ற 10 வருட காலத்திற்குள் எவ்வித திருத்த வேலைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.






 

(iii) கல்வி அமைச்சரினால் பெயரிடப்படும் தலைவரொருவர், சேவையாற்றுவதற்கு விருப்பம் தெரிவித்தாரென்றால் சாந்த ஜோசப் வித்தியாலயத்தின் பிரதான தேவ பூசகர் கறுத்துறை மாவட்ட அரசாங்க அதிபர், இலங்கையின் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர், களுத்துரை மீசத்தின் ரோமன் கத்தோலக்க மீசம் அருட்தத்தை மற்றும் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் ஆகியோரை உள்ளடக்கிய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையொன்றின் மூலம் வீடு நிர்வகிப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தும் அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) என்.டீ.ஏ.சில்வா விஜேசிங்க மரணச் சொத்திற்கு உரிய கடைசி விருப்ப சாட்சியத்தில் குறிப்பிடப்பட்டிருந்த கீழ் குறிப்பிடப்படும் ஏனைய நோக்கங்கள் கடந்த 5 வருட காலத்திற்குள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

- முதலியாரின் மரணத்தின் பின்னர் அவர்களின் ஆத்ம சாந்திக்காக தினத்திற்கு ஒன்றென பூசை நடத்துவதற்காக ரூபா 1000 தொகையொன்றை கண்டி ரோமன் கத்தோலிக்க அதிமேற்றானியருக்கு பெற்றுக்கொடுத்தல்.

- முதலியாரின் ஆத்ம சாந்திக்காக ஒவ்வொரு நாளும் சிறிய பூசை நடத்துவதற்காக தனது தோட்ட வருமானத்திலிருந்து ரூபா 75 தொகையொன்றை கொழும்பு சாந்த ஜோசப் வித்தியாலய பிரதான தேவ பூசகருக்கு பெற்றுக் கொடுத்தல்.

- தனது பெற்றோரின் ஆத்ம சாந்திக்காக பெரிய பூசை ஒன்றை நடாத்துவதற்கு வருடாந்தம் (மே 10 மற்றும் நவம்பர் 17) ரூபா 100/= விஞ்சிடாத தொகையொன்றை கொழும்பு சாந்த ஜோசப் வித்தியாலய பிரதான தேவ பூசகருக்கு பெற்றுக்கொடுத்தல்.

- சேமிப்பு தொகையொன்று காணப்படுமானால் லிட்டில் சிஸ்டர்ஸ் ஒப்f த புவர் என்ற நிறுவனத்தால் நடாத்தப்படுகின்ற கொழும்பு முதியோர் இல்லத்தின் இல்லத்தார்களின் உணவு பாணங்களுக்காக பெற்றுக்கொடுத்தல்.

- கொழும்பு சாந்த ஜோசப் வித்தியாலயத்தின் பரிசளிப்பு வைபவத்திற்காக 2 பரிசில்களை தனது பெற்றோர்களின் பெயரிலும் பெற்றுக்கொடுப்பதற்காக ரூபா 100 தொகையொன்றை பெற்றுக்கொடுத்தல்.

மேல் குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்கு பொருத்தமான அன்பளிப்புத் தொகையை நிகழ்காலத்திற்கு பொருந்தக் கூடிய வகையில் திருத்தங்களை மேற்கொண்டு உரிய தரப்பினர்களுக்கு கொடுப்பதற்கு திணைக்களத்தின் முகாமைத்துவத்தினால் அவதானம் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.3.2 ஆதனங்களின் பாதுகாப்பை உறுதி செய்தல்

------------------------------------------------------------------------

(அ) பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் ஆதனங்களின் பாதுகாவளராக நியமிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களிலே அந்த ஆதனங்களிற்குரிய அசையும் ஆதனங்களின் பாதுகாப்புக்காக போதுமான அளவு நடவடிக்கைகளை

பின்பற்றுதல் பொது நம்பிக்கைப் பொறுப்பாளரின் பொறுப்பாகும். அதன்படி சில நபர்களின் பொருட்கள் திணைக்கள கட்டிடத்திலே காணப்படுகின்ற பெட்டகத்தில் வைப்பு செய்யப்பட்டள்ளதை காணக்கூடியதாக இருந்தாலும் அந்தப் பொருட்களுக்கிடையில் அனேகமானவை எந்த நபருக்கு / மரணச் சொத்துக்கு உரியது இன்று அடையாளங் காணக்கூடியவாறு பதிவுக்குட்படுத்தி வைப்புச் செய்யப்படாததன் காரணமாக அந்த சொத்துக்களில் பாதுகாப்பு காவளர் என்ற வகையில் பொது நம்பிக்கைப் பொறுப்பாளரின் பொறுப்பை நிறைவேற்றியிருக்கவில்லை. என்பது அவதானிக்கப்பட்டது. மேலும் பெட்டகத்தினுள் காணப்பட்ட பல்வேறு வகையான வைப்புச் சான்றிதழ்கள், குத்தகை உறுதிப்பத்திரங்கள் மற்றும் வேறு கடிதங்கள் தொடர்பான பொருத்தமான நடவடிக்கைகளை பின்பற்றி அந்த கடித நடவடிக்கைகளை தீர்ப்பதற்கான முகாமைத்துவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) என்.டீ.ஏ.சில்வா விஜேயசிங்க முதலியரின் கடைசி விருப்ப சாட்சியத்தில் புராதன பெறுமதி வாய்ந்த அருங்சாட்சிப் பொருட்களின் பட்டியலொன்று குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அந்த அருங்காட்சிப் பொருட்கள் அவரின் பங்களாவில் வைப்புச் செய்து பாதுகாக்கபட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. (பொருள் பட்டியல் இணைப்பு 02 இல் காட்டப்பட்டுள்ளது.) இருப்பினும் அந்த அருங்காட்சி பொருட்களுக்கிடையில் ஒரு சில அருங்காட்சிப் பொருட்கள் மாத்திரம் திணைக்களத்தின் பெட்டகத்தில் வைக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய அருங்காட்சிப் பொருட்கள் காணப்படுகின்ற இடங்கள் தொடர்பாக திணைக்களத்திடம் அறிக்கை காணப்படவில்லை. அந்த பெட்டகத்தில் வைப்புச் செய்யப்பட்டிருந்த இடை பட்டியும் சிதைவடைந்திருந்ததுடன் வரலாற்றுப் பெறுமதிவாய்ந்த பொருட்களின் பாதுகாப்புக்காக போதுமான அளவு நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கவில்லை. அதன்படி மரணச் சொத்து உரிமையாளர் உரிய ஆதணங்களை பொது நம்பிக்கை பொறுப்பாளருக்கு ஒப்படைத்ததன் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) திருமதி ஸ்ரீமா இந்திராணி த சொய்சா அவர்களின் கடைசி விருப்ப சாட்சியத்தின் பிரகாரம் நுகேகொடை இலங்கை வங்கி சுப்பர் தர கிளையின் லொக்கர் இலக்கம் 738 இல் வைப்புச் செய்யப்பட்டிருந்த தங்க ஆபரணங்கள் 2007 செப்தெம்பர் 17 ஆம் திகதி திணைக்களத்தின் சட்ட மற்றும் விசாரணை அதிகாரியினால் பரிசீலனை செய்து பட்டியல்படுத்தப்பட்டிருந்ததுடன் அந்த பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள தங்க ஆபரணங்கள் மற்றும் கடைசி விருப்ப

சாட்சியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தங்க ஆபரணங்களின் வகை, அளவு மற்றும் உலோக வகை என்பவற்றுக்கிடையில் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| **கடைசி விருப்ப சாட்சியத்தின் படி ஆதனங்களின் பட்டியல்** | **பௌதீக பரிசீலனை மேற்கொண்டு தயாரிக்கப்பட்ட பதிவேட்டின்படி ஆதனங்களின் பட்டியல்.** |
|---|---|
| Two gold chains & gold bangle | தங்க நிற சங்கிலியுடனான வெள்ளை நிற கல் பதிக்கப்பட்ட வெள்ளி நிற மாலை 01 |
| Diamond necklace, eardrops, earstudes and diamond pendant | வெள்ளை நிற கல் பதிக்கப்பட்ட வெள்ளி நிற தொங்கும் காதணி மோசடி 01 |
| | தங்கநிற, கபில நிற மற்றும் நீலநிற கல் பதிக்கப்டப்ட காதணி சோடி 01 |
| Ceylon stone necklace and earstuds | ஒரு பவுன் நிறையுள்ள தங்க பென்டன் 01 |
| Coral pendant and earstuds | வெற்று ஆபரண பெட்டி 01 |

இந்த வேறுபாடுகள் தொடர்பாக திணைக்களத்தின் அவதானம் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. என்பதுடன் 738 ஆம் இலக்க வங்கி லொக்கரை திறத்தல் மற்றும் பொருட்பட்டியலை பெற்றுக்கொள்ளல் என்பவற்றுடன் வங்கி உத்தியோதக்தர்கள் இருவர், மற்றும் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் அபிவிருத்தி உதவியாளர் (சட்டம் மற்றும் விசாரணை) மற்றும் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் ஆகியோர் பங்குபற்றியதாக குறிப்பிடப்பட்டிருந்தாலும் பொருட் பட்டியல் சட்டம் மற்றும் விசாரணை அதிகாரியின் கையொப்பமிட்டு மாத்திரமே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனவே, பொருட்கள் பரிசீலிக்கப்பட்டு பொறுப்பேற்கப்படும் போது வெளிப்படைத்தன்மை பாதுகாக்கப்படும் வகையில் அந்த விடயங்கள் இடம் பெறுவதற்கு போதுமான அளவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நோர்டன் பிரிஜ், தலவாக்கலை வீதி நோர்டன் fபாமில் வசித்த 1989 ஒக்டோபர் 19 ஆம் திகதி காலஞ்சென்ற திரு.ஐ.டபிள்யூ.சீ.விஜேரத்ன அவர்களின் 1982 ஏப்ரலில் 21 ஆம் திகதிய 197 ஆம் இலக்க கடைசி விருப்ப சாட்சியத்தின் பிரகாரம் தனது மரணச் சொத்திற்கான பாதுகாப்பு

காவளராக பொது நம்பிக்கை பொறுப்பாளரை பெயரிடப்பட்டிருந்தது. 1990 ஜுன் 14 ஆம் திகதியிலிருந்து கடைசி விருப்ப சாட்சியத்தின் படி நோக்கத்தை நிறைவேற்றும் பொறுப்பு பொது நம்பிக்கை பொறுப்பாளருக்கு சாட்டபபட்டிருந்ததுடன் கடைசி விருப்ப சாட்சியத்தின் 6 ஆவது பந்தியின் பிரகாரம் நோர்டன் பிரிஜ்ஜில் அமைந்துள்ள வீட்டில் முதியோர் இல்ல மொன்றை அல்லது குருடர் ஊமை செவிடர் பாடசாலையொன்றை நடாத்திச் செல்லல் நோக்கமாக இருந்தது. இதன்படி பொது நம்பிக்கைப் பொறுப்பாளரினால் 1993 திசெம்பர் 7 ஆம் திகதி 5 ஏக்கர் அளவான காணி மற்றும் அங்கு அமைந்துள்ள வீட்டை முதியோர் இல்லத்திற்காக கினிகத்தேன பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. கினிகத்தேன பிரதேச செயலாளர் அலுவலகத்தினால் இந்த வீட்டில் கினிகத்தேன பிரதேச செயலாளரினால் தலைவர் பதவியை வகிக்கும் பாதுகாவலர் சபையினால் நிர்வகிக்கப்டும் சந்திரா விஜேரத்ன ஞாபாகார்த் முதியோர் பாதுகாப்பு மத்திய நிலையம் என்ற பெயரில் முதியோர் இல்லமொன்று 1994 மே 25 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

(i) மரணச்சொத்திற்குரிய அசையா சொத்து, வேறு தரப்பினருக்கு பெற்றுக் கொடுக்கப்படும் போது வீட்டை பொறுப்பளித்தல் மற்றும் பராமரித்தல் ஆகிய விடயங்கள் தொடர்பாக முறையான வகையில் இணக்கப்பாடொன்றை ஏற்படுத்திக் கொள்வதற்காக உடன்படிக்கையொன்றுக்கு முற்பட வேண்டுமெனினும் 2019 திசெம்பர் 10 ஆம் திகதியாகும் போது 25 வருடங்கள் கடந்திருந்தாலும் முறையான உடன்படிக்கையொன்றுக்கு முற்பட்டிருக்கவில்லை.

(ii) வீட்டின் இடவசதி போதுமானதாக இல்லை எனக் கூறி 3 சந்தர்ப்பங்களில் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக திணைக்களத்தின் முறையான அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை. என்பதுடன் அது அனுமதியற்ற நிர்மாணமொன்றாக அவதானிக்கப்பட்டது.

(iii) 2019 பெப்ரவரி 25 மற்றும் 26 ஆம் தினங்களிலே திணைக்கள உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளபட்ட கள ஆய்வு பரிசீலனை அறிக்கையின் படி இந்த மரணச் சொத்திற்கரிய 5 ஏக்கர் அளவிலான காணியில் எவ்வித பிரயோசனமும் பெறப்படவில்லை. என்பதுடன் தனியார் காணிகளின் எல்லையில் அமைந்துள்ள இருபுறமும் பாதுகாப்பு அரண்கள் நிர்மாணிக்கப்படாததுடன் திணைக்களத்தின் உரிமையை

காட்சிப்படுத்தக்கூடிய விளம்பரப் பலகையொன்று காட்சிப்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கபட்டிருந்தும் அது தொடர்பாக மேலதிக பரிசோதனையை மேற்கொண்டு தேவையான முன்னேற்றங்கள் இடம் பெற்றிருக்கவில்லை. மேலும், நிர்வாக சபை மேற்பார்வை செய்யும் முறைமையொன்றும் மற்றும் கணக்குகள் அறிக்கையை பெற்றுக் கொள்ளும் முறைமையொன்றும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.3.3 நிர்வாக உரிமங்கள் கிடைத்தன் பின் செயற்படுத்தல்

-----------------------------------------------------------------------------------------------

அனேகமான மரண சொத்து உரிமையாளர்களினால் பொருளாதார சமூக மற்றும் சமய ரீதியாக முக்கியமான வேலைகளை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கத்தில் அனேகமானவை மரணச் சொத்து திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் அவ்வாறான சந்தர்ப்பங்களிலே நிர்வாக உரிமங்கள் கிடைக்கப்பெற்றதும் உடனடியாக நோக்கத்தை செயற்படுத்துவதற்காக ஈடுபடுதல் மூலமாக மரணச்சொத்தாளருக்கு நன்மையானவைகள் இடம் பெறுவதுடன் பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றத்திற்கு பங்களிப்பும் இடம் பெறும். இருப்பினும் நிர்வாக உரிமங்கள் கிடைத்தன் பின்னர் பொது நம்பிக்கைப் பொறுப்பாளரினால் அவரின் பொறுப்பை விளங்கிக் கொண்டு வினைத்திறனாக நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு ஈடுபாடாததன் காரணமாக மரணச் சொத்தாளர்களின் நோக்கம் நிறைவேற்றப்படாமையும் அதனால் பொருளாதார மற்றும் சமூக நன்மைகளின் இழப்பும் அவதானிக்கபட்டது.

(அ) கொழும்பு மாவட்டத்தின் வெள்ளவத்தை பிரதேசத்தில் வாழ்நத 1999 நவம்பர் 28 அம் திகதி காலஞ் சென்ற திரு சீ.ஈ வணிகசூரிய அவர்களின் ஆதனங்கள் விற்று பெறப்பட்ட பணம் ‘‘சிசில் வணிக சூரிய’’ என்ற பெயரில் அறக்கட்டளையொன்றில் வைப்புச் செய்வதற்காக பொது நம்பிக்கை பொறுப்பாளருக்கு 2005 நவம்பர் 10 ஆம் திகதி நிர்வாக உரிமங்கள் கிடைக்கப்பெற்றிருந்தது. இருப்பினும் 2019 திசெம்பர் வரைக்குமான 14 வருட காலங்கள் கடந்திருந்தும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காணிகள் மற்றும் கட்டிடம் என்பவற்றை விற்பனை செய்து மரணச் சொத்து உரிமையாளரின் நோக்கத்தை நம்பிக்கையோடும் மற்றும் வினைத்திறனாகவும் நிறைவேற்றுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது. மேலும் அந்த காணிகளை அடையாளங்கண்டு பொது நம்பிக்கைப் பொறுப்பாளரின் உரிமை உறுதிப்படுத்தப்படும் வகையில் பாதுகாப்பதற்கு வேலைத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(i) வெள்ளவத்தை புகையிரத நிலைய ஒழுங்கையின் வீதவரி இலக்கம் 26 ஐ உடைய இடத்தில் அமைந்துள்ள காணிகளின் 1/3 பங்கை அரசினால் சுவீகரித்துள் கொண்டு எங்சியுள்ள பகுதி

(ii) 4 ஏக்கர் அளவிலான கொலொன்னாவை நகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள சேதவத்தை வீதவரி இலக்கம் 220, 220/1 மற்றும் 220/2 உடைய ஆதனம் மற்றும் கட்டிடம்.

(iii) கடவத்தை மிரிஸ்வத்தே ஊரலிங்கனத்த காணியின் விற்க்கப்படாமல் எஞ்சியிருந்த 1 ஏக்கர் 3 ரூட் 6.3 பேர்ச்சர்ஸ் காணி

(iv) ஹிக்கடுவை ரம்முத்தவில் அமைந்துள் 7 ஏக்கர் 3 ரூட் பேர்ச்சஸ் உடைய கீழ் மட்ட நிலத்தின் பிரிக்கப்படாத ¼ பங்கு

(v) பொரகடுன்னவில் அமைநதுள்ள 4 ஏக்கர் காணியின் பிரிக்கப்படாத 1/3 பங்கு

(vi) படகட்டய வில் அமைந்துள்ள 50 அடி மற்றும் 15 அடி விசாலமான காணித் துண்டின் பிரிக்கப்படாத 1/3 பகுதி

(vii) நில அளவை வரைபு 4070 இல் குறிப்பிடப்பட்டுள்ள துண்டு இலக்கம் 3 ஐ உடைய பானதுறையில் அமைந்துள்ள எலிவில்லா என்ற பெயருடைய 3 ரூட் 80 பேர்ச்சஸ் விசாலமான வயல் காணியின் 1/3 பங்கு

(ஆ) டீ.எஸ்.டபிள்யூ.சமரகோண் மரணச் சொத்துக்கு உரிய பிலியந்தலையில் அமைந்துள்ள ரெஜிடெல் தோட்ட காணியில் அரசிற்கு சுவீகரித்துக் கொண்ட 1 ஏக்கர் 2 ரூட் 18.46 பேர்ச்சர்ஸ் 2009 ஜுன் 02 ஆம் திகதி அவசது செய்யப்பட்டு 2011 மார்ச் 23 ஆம் திகதி திணைக்களத்திற்கு மீண்டும் கையளிக்கப்பட்டிருந்தது. 2019 திசெம்பர் ஆகும் போது 08 வருட காலங்கள் கடந்திருந்தும் அந்த காணியை விற்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. மேலும் அந்த மரணச் சொத்திற்கு உரிய பிலியந்தலை தெல்கஹவத்தையில் 6 ஏக்கர் 35.8 பேர்ச்சஸ் அளவான காணியின் உரிமை பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்திற்கு உரியதென 1965 ஜுலை 02 ஆம் திகதி

நீதிமன்ற தீர்ப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த காணியை விற்று மரணச் சொத்தின் நோக்கத்திற்காக ஈடுபடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(இ) கொழும்பு 7 பான்ஸ் பிளேஸில் வசித்த 1965 ஆகஸ்ட் 10 ஆம் திகதி காலஞ்சென்ற திருமதி ஜொஹானா டயஸ் ஜயவீர அபசேகர அவர்களினால் 1965 ஆகஸ்ட் 06 ஆம் திகதி எழுதப்பட்ட 92 ஆம் இலக்கமுடைய கடைசி விருப்ப சாட்சியத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக ஆதனங்களை விற்று பணத்தை பெற்றுக்கொள்ளுமாறு பொது நம்பிக்கை பொறுப்பாளருக்கு 1968 மார்ச் 31 ஆம் திகதி நிர்வாக உரிமங்கள் பெறப்பட்டிருந்தது.

(i) அந்த ஆதனங்களில் எல்பிட்டிய, குருந்துகஹ ஹெதெப்ம படபொலவில் அமைந்துள்ள 23 ஆம் இலக்கமுடைய கடைகள் மற்றும் எல்பிட்டிய, குருந்துகஹ ஹெதெப்ம படபொல வீதி 33/1 ஆம் இலக்க காணிகள் பகுதி 20 வருடங்களுக்கு அதிகமான காலமாக உடன்படிக்கையின்றி குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. 2013 மற்றும் 2015 வருடங்களிலே ரூபா 1,100,000 மற்றும் ரூபா 2,300,000 ஆக மதிப்பிடப்பட்டிருந்த இந்த கடைகள் மற்றும் காணியை தற்போது அனுபவித்து வருகின்ற குத்தகைாரர்களினால் மதிப்பீட்டுப் பெறுமதிக்கு கொள்வனவு செய்வதற்கு இணங்கியதாக குறிப்பிடப்பட்டிருந்தாலும் அதற்கான எழுத்து மூல இணக்கப்பாடொன்று காணப்படவில்லை. மேலும் கடைகளுக்காக 2018 மே வரை ரூபா 227,380 வும் காணிக்காக 2005 ஆம் வருடத்திலிருந்து 2015 ஆம் வருடம் வரை ரூபா 143,400 வும் குத்தகை வாடகை அறவிடப்பட வேண்டியுள்ளதாக கணக்கிடப்பட்டிருந்தாலும், அந்த தொகை உள்ளடங்களாக 2019 ஆம் வருடம் வரையான அறவிடப்பட வேண்டிய குத்தகை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) இந்த மரணச் சொத்திற்குரிய நுகேகொடை கந்த அத்தர கட்டிய நொஹொத் இஹல கந்த காணி தொடர்பாக இடம் பெற்ற காணிப்பகிர்வு வழக்கிற்காக 2013 ஆகஸ்ட் 26 ஆம் திகதி இறுதித் தீர்ப்பின் பிரகாரம் 01 ரூட் 26.6 பேர்ச்சஸ் பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு சொந்தமாக இருந்தது. 6 வருட காலம் கடந்திருந்தாலும் இந்த காணியை அபிவிருத்தி செய்வதற்கு அல்லது மதிப்பீட்டு அறிக்கையை பெற்று விற்பனை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(ஈ) ஜோன் வீரசிங்க மற்றும் பேபி என்ஸி அபநாயக சோடியின் 1956 மே 09 ஆம் திகதிய 19047 ஆம் இலக்க முடைய ஒன்றினைந்த கடைசி விருப்ப சாட்சியம் மற்றும் 1960 நவம்பர் 23 ஆம் திகதிய 22712 ஆம் இலக்க கொடிசில் பத்திரம் தொடர்பாக மாத்தறை மாவட்ட நீதி மன்றத்திலே இடம் பெற்ற 5466 இலக்க முடைய மரணச் சொத்து வழக்கு உரிய அந்த இருவரினதும் ஆதனங்களை நிர்வகிப்பதற்காக 1982 மார்ச் 30 ஆம் திகதி பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு நிர்வாக உரிமங்கள் வழங்கப்பட்டிருந்தது. அந்த ஆதனங்களிலிருந்து ஒவ்வொரு வருடமும் கிடைக்கப் பெறும் வருமானத்தில் நிதியமொன்றை உருவாக்கி அநுராதபுரத்தின் ரூவன்வெளிசேயேயின் மேம்பாட்டிற்காக அதன் சைத்திய முன்னேற்ற சங்கத்திற்கும் தம்பதிவ சித்தஸ்தானத்தின் அபிவிருத்திக்காக இந்தியாவின் மஹாபொதீ கம்பனிக்கும் சமமாக பிரிந்து அனுப்புமாறு கடைசி விருப்ப சாட்சியத்தில் நோக்கமாக குறிப்பிடப்பட்டிருந்தது. அது தொடர்பான அவதானம் பின்வருமாறு அமைந்தது.

(i) 1982 ஆம் வருடத்திலே நிர்வாக உரிமங்கள் கிடைக்கப் பெற்றிருந்தாலும் அறக்கட்டளை உறுதிப்பத்திரமொன்றை தயாரிப்பதற்காக 2009 ஜுன் 23 ஆம் திகதி வரைக்கும் 27 வருடங்களும், மரணச் சொத்தாளர்களின் நோக்கத்தை நிறைவேற்ற ஆரம்பிப்பதற்கு 2011 ஆம் வருடம் வரைக்கும் 29 வருடங்களும் எடுக்கப்பட்டிருந்தது.

(ii) மேற் கூறப்பட்ட மரணச் சொத்திற்கு உரிய மாத்தறை கபடா வீதயில் புஞ்சிபதஹெவத்த ‘‘பீ’’ எழுத்தினை உடைய துண்டுகளாக பிரிக்கப்டப்ட 03 ஆம் இலக்கமுடைய 32 பேர்ச்சஸ் விசாலமான காணி மற்றும் கட்டிடம் 2013 ஆம் வருடம் வரை ஆக்கபூர்வமான வகையில் முகாமைத்துவம் செய்யப்பட்டிருக்கவில்லை. என்பதுடன் 2013 பெப்ரவரி 05 ஆம் திதகி 312 ஆம் இலக்கமுடைய குத்தகை ஒப்பந்தத்தினபடி Y.T.K ஹரிஸ்சந்திர என்பவருக்கு மாதாந்தம் ரூபா 8,000 க்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. உரிய குத்தகை ஒப்பந்த 2013 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்திருந்தது. இந்த ஆதனத்தை விற்பதற்காக வழக்கு இலக்கம் 97/16 இன் கீழ் 2016 செப்தெம்பர் 29 ஆம் திகதி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்திலே, மாவட்ட நீதிபதியின் அனுமதியை பெற்றிருந்த போதிலும் ஆதனங்களை விற்று நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு முறையான குத்தகை ஒப்பந்தமொன்றுக்கு

முற்படாமல் மேற்குறிப்பிட்ட குத்தகைகாரருக்கே மாதாந்தம் ரூபா 10,000 தொகைக்க குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(உ) 1968 ஆகஸ்ட் 11 ஆம் திகதி சிங்கப்பூரில் காலஞ்சென்ற திருமதி புலோரன்ஸ் ஈனிட் விதம் அவர்களின் இலங்கையில் அமைந்துள்ள அசைவற்ற மற்றும் அசையும் ஆதனங்களை விற்பனை செய்து பெறும் பணத்தை உரிமையாளர்களுக்கு நலனாளிகளுக்கு வழங்கவதற்காக அட்டோனி தத்துவக்காரர்கள் 1975 ஆம் ஆண்டில் சிங்கப்பூர் பொது நம்பிக்கைப் பொறுப்பாளரினால் இலங்கை பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் நியமிக்கப்டப்டிருந்தார்.

(i) கொழும்பு 05 ஹெவ்லொக் வீதி 19 ஆம் இலக்க ஸ்தானத்தில் அமைந்துள்ள 01 ரூட் 3.13 பேர்ச்சஸ் ஆன பரப்பளவைக் கொண்ட காணி மற்றும் கட்டிடம் ரூபா 69,066,000 தொகைக்கு விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் அரச மற்றும் திணைக்களத்தின் செலவுகளை குறைத்ததன் பின்னர் ரூபா 64,645,776 உரிமையாளர்கள் / நலனாளிகள் 8 நபர்களுக்கிடையில் பகிர்ந்தளிப்பதற்கு இருந்தது. இந்த ஆதனங்களின் அட்டோனி தத்துவக்காரக பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் நியமிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் அப்படியென்றால் 1975 ஆம் வருடத்திலே 8 ஆதன உரிமையாளர்கள் மாத்திரம் காணப்பட்டு நீண்ட காலம் கடந்தபடியால் தற்போது அடையாளங் காணப்பட்டதன் படி உரிமையாளர்கள் 46 பேர் வரை அதிகரித்திருந்தது. அதன்படி ரூபா 35,880,064 தொகையொன்று உரிமையாளர்கள் / நலனாளிகள் 30 பேருக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்தது. மேலும் 16 நலனாளிகளுக்காக ரூபா 28,765,712 செலுத்தப்பட வேண்டியிருந்ததுடன் ஆதனங்கள் விற்கப்பட்டு 8 வருடங்களுக்கு அதிகமான காலம் கடந்திருந்த போதிலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) வழக்கு இலக்கம் 624/டீ மற்றும் 2008 ஒக்டோபர் 6 ஆம் திகதிய கொழும்பு மாவட்ட நிதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் ஆதனங்கள் விற்பனையின் மூலம் கிடைக்கப் பெறும் பணம் மற்றும் அதற்கு சேர்க்கப்டும் வட்டி என்பவற்றை இறந்து போனவரின் உரிமையாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இருப்பினும், ஆதன விற்பனையின் கிடைத்த ரூபா 24,531,570 வை 16

நலனாளிகளுக்கிடையில் 2010 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் அண்டு வரையான காலத்திற்குள் பகிர்ந்தளிக்கும் போது, அந்த பணத்தை விடுவிக்கும் வரைக்கும் ஆக்கபூர்வமான முதலீட்டு வழிகளில் ஈடுபடுத்தாதன் காரணமாக நலானாளிகளுக்கு கிடைத்திருக்க வேண்டியதாக இருந்த வட்டித் தொகை இழக்கப்பட்டிருந்தது.

(iii) இந்த மரணச் சொத்து தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு அட்டோனி அனுமதிப்பத்திரம் கிடைக்கப் பெற்ற 2019 ஆம் ஆண்டு ஆகும் போது 44 வருடங்கள் கடந்திருந்தாலும், கொழும்பு 5 ஹெவ்லொக் வீதி க்லாசன் ஒழுங்கை 12 ஆம் இலக்கமுடைய 01 ரூட் 5.62 பேர்ச்சஸ் வீட்டுடனான காணி அந்த வீட்டில் வசித்து வருபவரினால் அந்த ஆதனத்தை விற்பதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுவின் காரணமாக அந்த ஆதனத்தை விற்று நலானிகளுக்கு பணம் செலுத்தி நிறைவு செய்வதற்கு இலங்கை பொது நம்பிக்கை பொறுப்பாளர் தவறியிருந்தார். பொருத்தமான காலத்தில் சரியான தீர்மானத்தை எடுக்காமையும், நிறைவேற்றப்பட வேண்டிய வேலைகளை வினைத்திறனாக நிறைவேற்றுவதற்காக திட்டங்கள் தீட்டப்படாமையும், பின்தொடர் நடவடிக்கைகள் போதுமான அளவு இல்லாமையின் காரணமாகவும் ஆதன உரிமையாளர்களின் நோக்கம் நிறைவேற்றப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஊ) வடமத்திய மாகாணத்தில் அநுராதபுரம் மாவட்டவத்தில் அனுராதபுரம் நகரில் வசித்த 1998 பெப்ரவரி 22 ஆம் திகதி காலஞ்சென்ற ஆர்.எல்.எச் சந்திரசேகர என்பவரின் 1993 செப்தெம்பர் 09 ஆம் திகதிய கடைசி விருப்ப சாட்சியத்தின் பிரகாரம் ஆதன நிர்வாகம் தொடர்பாக 2003 ஜுன் 04 ஆம் திகதி வரையறுக்கப்பட்ட ப்ரொபேட் அனுமதிப்பத்திரமொன்று பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு வழங்கப்பட்டிருந்தது.

(i) அனுமதிப்பத்திரம் பெறப்பட்டு 16 வருடங்கள் கடந்திருந்தாலும் இந்த மரணச் சொத்திற்குரிய காணியின் பிரமாணத்தை அறவிட்டு எல்லையை வேறாக்கி ஆதனத்தை பாதுகாத்துக் கொள்வதற்கும் கடைசி விருப்ப சாட்சியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கத்தை நிறைவேற்றுவதற்கும் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. இந்த மரணச் சொத்து தொடர்பான மரணச் சொத்து வழக்கொண்றின் காரணமாக இவ்வாறான தாமதம் நிலவியதாக திணைக்களத்தினால் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் 2019 செப்தெம்பர் 30 ஆம் திகதி உரிய வழக்கின் தீர்ப்பு

அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளாமல் முறையீட்டை தாக்கல் செய்தன் காரணமாக நோக்கத்தை நிறைவேற்றவது மேலும் தாமதமடைந்திருந்தது.

(ii) இந்த மரணச் சொத்திற்கு உரிய அனுராதபுரம் மாவட்டத்திலே நுவரகம்பலதே, நுவரகம்கோரலே, ரத்மலேதுலானே, பொதானேகமவில் அமைந்துள்ள லொட் இலக்கம் 1 மற்றும் 2 என குறிப்பிடப்பட்டுள்ள 18 ஏக்கர் 03 ரூட் 01 பேர்ச்சஸ் விசாலமான காணி மற்றும் லொட் இலக்கம் 3 என குறிப்பிடப்பட்டுள்ள 17 ஏக்கர் 02 ரூட் 23 பேர்ச்சஸ் விசாலமான காணிக்காக பொது நம்பிக்கைப் பொறுப்பாளரினால் 2000 ஜுலை 4 ஆம் திகதி தற்காலிகமாக குத்தகையொருவர் நியமிக்கப்டப்டிருந்தார். இருப்பினும். ஆதன பாதுகாப்பு, விவசாய நடவடிக்கைகள், குத்தகை வருமானங்கள் மற்றும் குத்தகை நிபந்தனைகளுக்காக முறையான குத்தகை உடன்படிக்கையொன்றிற்கு முற்படுவதற்கு 2020 ஜனவரியிலும் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. உறுதியாக பங்கு விளைவுக்காரினால் விதைத்த வயல் நிலங்களிண் ஏக்கர் எண்ணிக்கை எவ்வளவு உரிய போகத்திவெ நெல்லுக்கான உத்தரவாக விலை எவ்வளவு: மற்றும் தென்னங் காணியில் விதைக்கும் அளவு மற்றும் விளைச்சல் எவ்வளவு அதன்படி பங்கு கிடைக்கும் எண்ணிக்கை சரியானதா என்பது பங்கு தொடர்பாக பொது நம்பிக்கையாளர் திணைக்களத்தினால் எச் சந்தர்ப்பத்திலும் மேற்பார்வை ஒன்று அல்லது தொடர் செயல் நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கவில்லை. என்பதுடன் பங்கு விளைவுகாரரினால் அவரின் விருப்பதிற்கேற்ப செலுத்தப்படுகின்ற பங்கை பெற்றுக்கொண்டு கணக்கிடப்பட்டிருந்தது. அதன்படி 2000 ஆம் வருடத்தலிருந்து 2019 ஆம் வருடம் வரை 36 ஏக்கர் 1 ரூட் 24 பேர்ச்சஸ் இனால் கிடைக்கும் வருமானம் ரூபா 3,575,542 மாத்திரமே.

(iii) இந்த மரணச் சொத்திற்குரிய அனுராதபுரத்தின் பழைய நகரத்தின் குருநாகலை வீதியில் 238 ஆம் இலக்க மற்றும் 239 ஐ உடைய வியாபாரக் கட்டிடம் மற்றும் அவை அமைந்துள்ள நிலத்தை முறையான உடன்படிக்கைகள் இல்லாமல் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2000 ஆம் வருடத்தின் மார்ச்சில் இருந்து குத்தகைக்தாரர் குத்தகை தொகைய செலுத்துவதை கைவிட்டிருந்ததுடன், அதனால் அந்த ஆதனங்களின் முகாமைத்துவம் தொடர்பான அவதானம் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) அனுராதபுர புதிய நகரில் ஹரிஸ்சந்திர மாவத்தையில் 48/388 இலக்க இடத்தில் அமைந்துள்ள வியாபார கட்டிடம் மற்றும் காணி தொடர்பாக 14289/எல் இலக்க வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் ஆதனத்தை தீர்த்துக் கொண்டு முறையாக குத்தகைக்கு வழங்கி மரணச் சொத்தின் பெயரில் வருமானத்தை ஈட்டிக் கொள்ளவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

### 3.3.4 ஆதன முகாமைத்துவம்

------------------------------------

வெவ்வேறு மரணச் சொத்தின் கீழ் பொறுப்பளிக்கப்பட்டுள்ள 10 தோட்ட ஆதனங்கள் பொது நம்பிக்கைப் பொறுப்பாளரினால் முகாமைத்துவம் செய்யப்படுகின்றதென்பதுடன் அந்த ஆதனங்கள் முறையாக முகாமைத்துவம் செய்யப்பட்டு அதன் வருமானத்தில் ஸ்தாபகரின் நோக்கத்தை நிறைவேற்றுதல் எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறு பொறுப்பளிக்கப்பட்டுள்ள ஆதனங்கள் பின்வருமாறு.

| மரணச் சொத்தின் பெயர் | தோட்டத்தின் பெயர் | அமைவு | பிரதான பயிரிடல் |
|---|---|---|---|
| ஹெரி ஹபுகொட மரணச் சொத்து | சுதுவெலிபொத தோட்டம்<br>மத்தக தோட்டம் | பத்தேகம<br>நியாகம | தெங்கு, இறப்பர்,<br>தேயிலை |
| என்.டீ.ஏ.சில்வா விஜேசிங்க மரணச் சொத்து | ரிச்மன்ட் பாக் தோட்டம் | களுத்தறை<br>ஹேனேகம | தெங்கு, இறப்பர்<br>தெங்கு |
| ஏ.ஏ.எல.த அல்விஸ் மரணச் சொத்து | மழுவஹேண தோட்டம் | மீரிகம | தெங்கு |
| டீ.பீ.ஜயதிலக்க மரணச் சொத்து | பிடகந்த தோட்டம் | தொடன்கஸ்லந்த | தெங்கு |
| என்.டீ.எஸ் சில்வா மரணச் சொத்து | லபுஹேண தோட்டம் | குருநாகல் | தெங்கு |
| முஹன்திரம் ஜயவிக்ரம மரணச் சொத்து | திஸ்ஸமஹாராமய | கொட/மட இடம் | நெல் |
| மெண்டிஸ் சில்வா மரணச் சொத்து | திஸ்ஸமஹாராமய | கொட/மட இடம் | நெல் |
| எச்.ஏ.த.சில்வாமரணச் சொத்து | தோப் தோட்டம் | ஹொரண | இறப்பர் |

(அ) கடந்த நான்கு வருடங்களில் தோட்டங்களில் கிடைத்த வருமானம் தொடர்பான பரிசீலனையின் போது 2016, 2017 மற்றும் 2018 ஆம் வருடங்களில் முறையே ரூபா 3,744,310 வும் ரூபா 9,336,629 வும் மற்றும் ரூபா 3,984.175 வுமான இலாபமும் 2019 ஆம் வருடத்திலே ரூபா 6,222,482 நட்டமும் கிடைத்திருந்தது. வருமானம், செலவு மற்றும் இலபாம் தொடர்பான விபரமான தகவல்கள் இணைப்பு 03 இல் காட்டப்பட்டுள்ளது. தோட்ட வருமானங்களில்

ஏற்றத்தாழ்வுகளை காணக்கூடியதாக இருந்ததுடன் 2019 ஆம் வருடத்திலே நட்டமடையக் கூடிய நிலைக்கு உருவாகியிருந்தது. இந்த தோட்டங்களின் வருமானங்களை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதின் ஊடாக குறித்த மரணச் சொத்துக்காரர்களின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு போதுமான அளவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) ஹெரீ ஹபுகொட மரணச் சொத்துக்கு உரிய காலி நியாகம பிரதேசத்தில் அமைந்துள்ள 17 ஏக்கருடைய முழு நிலப்பரப்பு மத்தக தோட்ட முகாமைத்துவம் தொடர்பான பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(i) இந்த தோட்டத்தின் 15 ஏக்கர் 2 ரூட் 38 பேர்ச்சஸ் நிலம் தொடர்பாக மாத்திரம் திணைக்களத்தின் அவதானம் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் எஞ்சியுள்ள காணியின் அளவு தொடர்பாக அவதானம் ஈடுபடுத்தப்பட்படிருக்கவில்லை. அந்த காணியை உறுதியாக அடையாளங்கண்டு பாதுகாப்பான எல்லையை இட்டு, பாதுகாப்பு வேலியை நிர்மாணித்து விவசாய நடவடிக்கையொன்றிற்கு ஈடுபடுத்துவதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது.

(ii) 15 ஏக்கர் 2 ரூட் 38 பேர்ச்சஸ் அளவை A யிலிருந்து E வரை 5 துண்டுகளாக பிரித்து வேறாக்கபட்டிருந்ததுடன் A,D மற்றும் E துண்டு களில் சில இடங்களில் தேயிலை நடப்பட்டிருந்ததுடன் B மற்றும் C துண்டுகளில் காட்டு மரங்கள் உருவாகியிருந்தது. அந்த தேயிலை உற்பத்தி 20 வருடங்களை விட பழையது என அவதானிக்கப்பட்டதுடன் செடிகள் நாட்டப்பட்டிராமையால் சில வெற்று நிலங்கள் அவதானிக்கப்பட்டது.

(iii) ஒரு ஏக்கருக்கு விளைவிக்கப்பட வேண்டிய சாதாரணமான தேயிலை மரங்களின் அளவு 5000 ஆக இருப்பதுடன் 3 மாதங்களுக்கு ஒரு முறை ஒரு ஏக்கருக்கு 150 கிலோகிராம் பசளை இடப்பட வேண்டும். மரம் தொடர்பான கணக்கெடுப்பொன்று மேற்கொள்ளப்படவில்லை. என்பதுடன் விளைவிக்கப்ட்டுள்ள மரங்களின் எண்ணிக்கைத் தொடர்பான திணைக்களத்தில் தகவல்கள் காணப்படவில்லை. 2019 ஆம் வருடத்திலே கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பசளை இடப்பட்டுள்ளதுடன் ஒரு ஏக்கருக்கு நாட்டப்பட்டுள்ள செடிகளின் எண்ணிக்கை தொடர்பான

தகவல்கள் இல்லாததன் காரணமாக பசளையின் அளவு போதுமானதாக என்ற மதிப்பீட்டிற்கு செல்ல முடியாதுள்ளது. எவ்வாறாயினும் எந்தக் காணிப் பகுதிக்கும் 3 மாதங்களுக்கு ஒரு முறை பசளை இடம் பெற்றிருக்கவில்லை.

| | **அளவு (கிலோ கிராம்)** | **பசளை இடப்பட்ட காணிகளின் பகுதி** | **காணிப் பகுதிகளின் விசாலத்தன்மை** |
|---|---|---|---|
| 2019/04/26 | 350 | A, B,C | 5 ஏக்கர் 3 ரூட் 32 பேர்ச்சஸ் |
| 2019/04/30 | 200 | D | 5 ஏக்கர் 2 ரூட் 34 பேர்ச்சஸ் |
| 2019/05/02 | 250 | D | 5 ஏக்கர் 2 ரூட் 34 பேர்ச்சஸ் |
| 2019/05/09 | 300 | D | 5 ஏக்கர் 2 ரூட் 34 பேர்ச்சஸ் |
| 2019/10/03 | 300 | E | 4 ஏக்கர் 12 பேர்ச்சஸ் |
| 2019/10/11 | 300 | A, B, C | 5 ஏக்கர் 3 ரூட் 32 பேர்ச்சஸ் |
| | 1700 | | |

(iv) தோட்ட பங்களா உடைந்த நிலையில் காணப்படுவதாக பௌதீக பரிசீலனையின் போது அவதானிக்கப்பட்டதன் மூலம் பராமரிப்பு நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்படுவது அவதானிக்கப்பட்டது. இந்த தோட்டத்திற்காக தோட்ட காவற்காரர் ஒருவர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை என்பதுடன் நாளாந்த போலீஸ் காவல் நடமாட்ட சேவையையும் பெற்றுக்கொண்டிருக்கவில்லை. நாளாந்த சம்பளம் போதுமானதாக இல்லாததன் காரணமாக கொழுந்து பறிப்பவர்களின் வரவும் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதாக வரவு பதிவேடுகளில் உறுதிப்படுத்தப்பட்டது. இந்த நிர்வாக பலவீனம் தொடர்பாக கவனித்துப் பார்க்கும் போது 17 ஏக்கர் அளவான காணிகள் ஆக்கபூர்வமான வகையில் முகாமைத்துவம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.



**மத்தக தோட்டத்தில் காட்டு மரங்கள் உருவாகியுள்ள விதம்**

(இ) மேல் குறிப்பிடப்பட்டுள்ள மரணச் சொத்துக்கு உரிய சுதுவெளிபொத தோட்டத்தின் தோட்ட ஆதனங்களின் முகாமைத்துவம் தொடர்பான பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(i) சுதுவெளிபொத தோட்டத்தின் அன்குடுதுவ என்ற பெயருடைய நிலத்துண்டின் 13.5 ஏகக்கர் அளவு இறப்பர் பயிரிடப்பட்ட காணியில் இறப்பர் மரங்கள் சிலவற்றில் மாத்திரம் நிகழ் காலத்தில் இறப்பர் பால் பெறப்படுவதுடன் ஒரு நாளைக்கு ஒரு தொழிலாளரினால் மாத்திரம் இறப்பர் பால் வெட்டப்படுகின்றது. பெரும்பாலான மரங்கள் நீக்கப்பட்டு மீண்டும் செடி செய்கைகள் இடம் பெறவேண்டிய தரத்தில் காணப்படுவதாக அவதானிக்கபட்டது. அனுமதியற்ற பல நிர்மாணப் பணிகள் இந்த தோட்டத்தில் இடம் பெறுவதாக பௌதீக பரிசீலனையின் போது அவதானிக்கப்பட்டதுடன் அது தொடர்பாக திணைக்களத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) தோட்ட பங்களாவின் கூரையின் பராலை மற்றும் ஜன்னல் நிலைகள் அரிக்கப்பட்டுருப்பதுடன் கூரையின் சில பகுதிகள் பொலித்தீனினால் மூடப்பட்டிருந்தது. அந்த பங்களாவில் தோட்டட அதிகாரி மற்றும் துறைசார்ந்த உத்தியோகத்தர் ஒருவர் தங்கியிருந்ததுடன் உடைந்த நிலைமையின் காரணமாக தங்கியிருப்பதற்கு தகுதியான நிலைமை இல்லையென்பதுடன் துரிதமாக திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட வேண்டியது அவசியம் என்பது அவதானிக்கப்பட்டது.



**உடைந்த நிலைமையின் காணப்படுகின்ற சுதுவெளிபொத தோட்டத்தின் தோட்ட பங்களா**

### 3.3.5 மரணச் சொத்து முகாமைத்துவம் தொடர்பாக பொதுமக்களுக்கு சமீபமாகும் மட்டம்.

---

வெவ்வேறு கட்டளைச் சட்டங்களின் ஊடாக திணைக்களத்திற்கு விஷேடமான பொறுப்பொன்று ஒப்படைக்கபட்டிருந்ததுடன் அதன்படி திணைக்களத்தின் வெவ்வேறு தரப்பினர்களுக்கு வெவ்வேறு சேவைகள் வழங்கப்படுகின்றன. இருப்பினும், திணைக்களத்தினால் நிறைவேற்றப்படுகின்ற பொறுப்புக்கள் தொடர்பாக பொது மக்களை அறிவூட்டுவதற்காக முறையான வேலைத்திட்டமொன்று தினைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. திணைக்களத்தின் பெயரில் வெப் பக்கமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அது சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளின் பரிசீலனைக்கான வசதிகள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் திணைக்களத்தின் பின்புலம் பொது நம்பிக்கைப் பொறுப்பாளரின் பொறுப்புக்கள் மற்றம் ஒவ்வொரு பிரிவினது பொறுப்புக்கள் மாத்திரம் அதில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் பொது மக்களுக்கு விபரமான தகவல்களை பெற்றுக்கொள்ள முடியுமான வகையில் மற்றும் அந்த ஆதனங்களின் பாதுகாவளராக பொது நம்பிக்கைப் பொறுப்பாளரை

நியமித்தலுக்கான அக்கரையொன்று ஏற்படும் வகையில் தகவல்கள் உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை.

உதாரணம்

(i) ஒவ்வொரு வருடத்திலும் பெற்றுக் கொடுக்கப்படுகின்ற மாணவர் உதவிகள், வைத்திய உதவிகள், புண்ணியகாரியங்களுக்கான உதவிகள் ஆகிய பல்வேறு உதவிகள் தொடர்பாக விபரமான தகவல்களை சமர்ப்பிப்பதன் மூலம் உதவி தேவைப்படுகின்ற நபர்களுக்கு தெரியவருவதுடன் அவ்வாறான புண்ணியமான நடவடிக்கைகளுக்காக தமது ஆதனங்களை ஈடுபடுத்துவதற்கு விருப்பம் தெரிவிக்கக் கூடிய மக்கள் தொகுதியினர் உருவாக்கப்படுதல் மூலமாக சமூக ரீதியாக பெறுமதியான சேவையொன்றை நிறைவேற்றுவதற்கான வல்லமை காணப்படும்.

(ii) மாணவர் உதவிக்கான விண்ணப்பப்பத்திரத்தை வெப் பக்கத்தின் ஊடாக தரவிரக்கம் செய்ய முடியுமென குறிப்பிடப்பட்டிருந்தாலும் வெப் பக்கத்தினுள் அவ்வாறான வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 4. பரிந்துரைகள்

---------------------

### 4.1 திட்டமிடுதல்

---------------------

(அ) திணைக்களத்தின் நோக்கம் வினைத்திறனாகவும் மற்றும் ஆக்கபூர்வமாகவும் நிறைவேற்ற முடியுமான வகையில் நிறுவன பொறுப்புக்களை அடையாளங்கண்டு அதற்காக தேவையான வளங்கள் மற்றும் காலத்தை தீர்மானித்து குறுங்கால மற்றும் நெடுங்கால திட்டங்களை தயாரித்தல் இடம் பெற வேண்டுமென்பதுடன் அவற்றை நடைமுறைப்படுத்தலை உறுதி செய்தலுக்காக காலத்திற்கேற்ற செயலாற்ற மதிப்பிடப்படுதல் வேண்டும்.

(ஆ) திணைக்களத்தின் பொறுப்புக்கள் மற்றும் கடமைகளை வினைத்திறனாகவும் மற்றும் ஆக்கபூர்வமாகவும் நிறைவேற்றுவதற்காக நன்மை பயக்கும் வகையில் அனைத்து மரணச் சொத்துக்கள் மற்றும் அறக் கட்டளைகள் தொடர்பாக விபரமான தகவல்களை வெளிக்காட்டும் வகையில் தொடர்பாடல் கட்டமைப்பொன்றை பேணுதல் மற்றும் அந்த கட்டமைப்பிற்கான தகவல்களை நாளது வரையாக்கும் பொறுப்பை நிரந்தர உத்தியோகத்தரொருவருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

**4.2 ஆதன முகாமைத்துவம்**

-------------------------------------------

(அ) அடையாளங் காணப்படாத காணிகள் மற்றும் ஆதனங்களை அடையாளங் காண்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு பொது நம்பிக்கைப் பொறுப்பாளரின் உரிமையை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் மற்றும் நட்டயீடு பெறப்படாத இடங்களுக்கு உரிய நட்டயீட்டை பெற்றுக்கொள்வதற்காக நட்டயீடு செலுத்தப்பட வேண்டிய தரப்பினருடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளுதல் மற்றும் நட்டயீடு பெற்றுக்கொள்ளுதல் தொடர்பான அறிக்கை மற்றும் பதிவெடுகளை முறையான வகையில் பராமரித்தல் வேண்டும்.

(ஆ) சட்டபூர்வமான அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருந்தால் மாத்திரம் மரணச் சொத்துக்கள் தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். மரணச் சொத்தாளர்களின் நோக்கங்களுக்கு முரணான விடயங்களுக்காக மரணச் சொத்து ஆதனங்களை உபயோகப்படுத்தக்கூடாது மற்றும் ஆதனங்களுக்கு சேதங்கள் ஏற்படாத வகையில் ஆதன முகாமைத்துவம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(இ) வெளி தரப்பினருக்கு மரணச் சொத்துக்களை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொடுக்கும் சந்தர்ப்பங்களில் ஆதனங்களின் பாதுகாப்பையும் ஆதனங்களினால் சாதாரணமான வருமானமொன்றை பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக முறையான குத்தகை உடன்படிக்கைக்கு முற்படுதல் குத்தகையை வழங்க தவறிய ஆதனங்களை மீண்டும் பெற்றுக்கொள்வதற்காக தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

(ஈ) பாதுகாப்பு பெட்டகத்தில் காணப்படுகின்ற பொருட்கள் மற்றும் ஆவணங்களின் உரிமையாளரை அடையாளங் காணக்கூடிய பொருட்கள் தொடர்பாக மரணச் சொத்தின் நோக்கத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். மற்றும் அடையாளங் காணமுடியாத பொருட்களை நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்து நீதிமன்ற அனுமதியுடன் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(உ) அசைவுள்ள ஆதனங்களை பரிசீலனை செய்து பொறுப்பேற்கும் போது அதன் வெளிப்படைத்தன்மையை பாதுகாப்பதற்காக திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக சுயாதீன தரப்பினர்களை (உதாரணமா வழக்கறிஞர், அமைச்சின் உத்தியோகத்தர்) பங்கு கொள்ளச் செய்தல் மற்றும்

ஆதனங்களை பட்டியல்படுத்தும் அதற்காக பங்களிப்பு செய்த அனைத்து உத்தியோகத்தர்களினதும் கையொப்பத்துடனான பட்டியல் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

(ஊ) வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பொருட்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியது மற்றும் திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் அனைத்து மரணச் சொத்திற்கும் உரிய காணிகளிலும் திணைக்கத்தின் பெயர் பொறிக்கப்பட்ட பெயர் பலகையை காட்சிப்படுத்தல்.

(எ) விற்பணைக்காக நீதிமன்ற அனுமதி பெறப்பட்ட காணி மற்றும் கட்டிடங்களை விற்பனை செய்து மரணச் சொத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் மற்றும் அடையாளம் காணப்படாத காணிகளை அடையாளங் கண்டு அறவீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு பொது நம்பிக்கைப் பொறுப்பாளரின் உரிமை உறுதிப்படுத்தப்படும் வகையில் பாதுகாப்பதற்கு வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

(ஏ) 2020 மற்றும் 2021 ஆம் வருடங்களுக்காக தோட்டங்களில் மீண்டும் பயிரிடுவதற்காக தயாரிக்கப்பட்ட திட்டங்களை மீண்டும் மீளாய்வு செய்து தேவையான திருத்தங்களை மேற்கொண்டு நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

(ஐ) அனுமதியற்ற நிர்மாணங்கள் இடம் பெறகின்ற தோட்டங்களில் அளவீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக சட்டபூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் மற்றும் பாதுகாப்பு வேலி நிர்மானிக்கப்படாத தோட்டங்களில் பாதுகாப்பு வேலியை நிர்மாணிப்பதற்கும் பாதுகாப்பு வேலி உடைந்திருக்கும் இடங்களை திருத்தங்களை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஒ) பயிரிரப்படாத நிலங்களில் அந்த தோட்டத்திற்கு உரிய பிரதான பயிரிடுதலை தவிர நிகழ்காலத்தில் வர்த்தக பெறுமதியில் உயர்ந்த வேறு பயிர் வகைகளை ஆரம்பிப்பதற்கான வள ஆய்வு தொடர்பான அவதானம் ஈடுபடுத்தப்படல் (உதாரணம் :- பச்சை மிளகாய், பழ வகை) மற்றும் மீண்டும் பயிரிடுவதற்காக அரசின் உதவிகளை பெற்றுக் கொள்வதின் வல்லமையை பரிசீலித்தல்)

(ஓ) தோட்ட அதிகாரிகளுக்கு வேலைகள் மற்றும் பொறுப்புக்களை எழுத்து மூலமாக ஒப்படைக்கப்படுதல் வேண்டும். மற்றும் தோட்டம் தொடர்பாக தோட்ட அதிகாரிகளினால் பேணப்பட்டிருக்க வேண்டிய பதிவேடுகளை முறையான வகையில் பேணிச் செல்வதற்கான எழுத்து மூலமான அறிவுரைகள் பெற்றுக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(ஔ) தோட்டங்களில் நாட்டப்பட்டுள்ள மரங்கள் தொடர்பாக கணக்கெடுப்பொன்றை மேற்கொள்ளல் மற்றும் பழைய இறப்பர் மரங்களை வெட்டி விற்பனையில் கிடைக்கும் வருமானத்தை மீண்டும் பயிரிடுவதற்காக ஏற்படும் கிரயத்தின் ஒரு பகுதியை பெற்றுக்ொகள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.

(க) ரிச்மன்ட் பங்களாவின் மாணவர் விடுதியை திருத்தங்கள் மேற்கொள்வதற்காக மதிப்பீடு தயாரிக்கபட்டு அதை திருத்துவதற்கான நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். மற்றும் பங்களாவின் கூரை மற்றும் ஏனைய உடைந்த இடங்களை திருத்தங்கள் செய்து கவர்ச்சிகரமான இடமாக மாற்றப்படுதல் வேண்டும்.

(கா) நிதியங்கள் ஆக்கபூர்வமான முதலீடுகளுக்கு ஈடுபடுத்தப்பட வேண்டும். மற்றும் முதலீட்டுப் பதிவேடுகள் உட்பட அனைத்து பதிவேடுகளும் முறையாக பேணப்பட வேண்டியது தொடர்பாக அறிவுரைகள் பெற்றுக்கொள்ளப்படுதல் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகள் முறையாக இடம் பெறுதல் வேண்டும்.

## 4.3 நிர்வாக நடவடிக்கைகள்

------------------------------------------

(அ) நிர்வாக நடவடிக்ககைகள் தொடர்பாக சிரேஷ்ட பதவியொன்றை அங்கீகரித்துக் கொள்ளுதல் மற்றும் அமைப்பு வியூகத்தை மறு சீரமைப்புக்கு உட்படுத்தல் வேண்டும்.

(ஆ) பதவிகளின் வெற்றிடங்கள் நிரப்பபடுதல், அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் எழுத்து மூலமாக பொறுப்புக்களை வழங்குதல், செயலாற்றல் மதிப்பீட்டில் முறைமையொன்றை அறிமுகம் செய்தல், மற்றும் மாதாந்தம் / தவணை அடிப்படையில் செயலாற்றல் மதிப்பீடு இடம் பெறுதல் வேண்டும்.

(இ) 02/2018 மற்றும் 2018 ஜனவரி 24 ஆம் திகதிய அரச நிர்வாக சுற்று நிரூபத்தின் பிரகாரம் மனித வள அபிவிருத்தி திட்டங்கள் தயாரிக்கப்படுதல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.

(ஈ) கோப்புகள் பதிவேட்டிற்குட்படுத்துதல் மற்றும் பேணுதலுக்காக பொதுவானதொரு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டியதுடன் ஒரே மரணச் சொத்து அறக்கட்டளைக்காக ஒரு கோப்பை விட அதிகமாக காணப்படும் சந்தர்ப்பங்களிலே முறையாக இலக்கிடமிட்டு பேணப்படுதல் வேண்டும்.

(உ) திணைக்களத்தின் சட்ட நடவடிக்கைகளுக்காக முன்வருவதற்கு விருப்பம் தெரிவிக்கும் வழக்கறிஞர்களை உள்ளடக்கிய வழக்கறிஞர் சபையொன்றை அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க நிருவிக் கொள்ளுதல் மற்றும் ஒவ்வொரு வழக்கு நடவடிக்கைகளுக்கும் பொருத்தமான வழிக்கறிஞரை வெளிப்படைத்தன்மையுடன் நியமித்தல் வேண்டும்.

(ஊ) நோக்கங்கள் நிறைவேற்றபட்டு இருப்பினும் சொத்துக்கள் காணப்படுகின்ற அறக்கட்டளை / மரணச் சொத்து மற்றும் பொது நம்பிக்கை பொறுப்பாளர் கட்டளைச் சட்டத்தின் 43 ஆவது பிரிவின் பிரகாரம் 12 வருட காலத்திற்குள் நலனாளிகளை கண்டு பிடிக்க முடியாமல் போன அறக்கட்டளைக்கு உரியதாக காணப்படுகின்ற நிதிச் சொத்துக்களினால் நிதியமொன்றை ஸ்தாபித்து சட்டரீதியான செலவுகளை மேற்கொள்ளும் வல்லமையொன்று காணப்படுகின்றதா என்பது தொடர்பாக நீதிமன்ற அறிவுரையை பெற்றுக்கொள்ளுதல்.

## 4.4 கோப்புகள் முகாமைத்துவம்

---------------------------------------------

(அ) கடைசி விருப்ப சாட்சியம், நிர்வாக உரிமங்கள், ஆதனங்கள் தொடர்பான முக்கியமான பதிவேடுகள் மற்றும் வழக்கு தீர்ப்புகளின் மூலப்பிரதிகள் பெட்டகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) 1992 ஆம் வருடத்திற்கு முன்னர் பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு வைப்புச் செய்யப்பட்டுள்ள கடைசி விருப்ப சாட்சியத்தின் உரிமையாளர்கள் தொடர்பாக தகவல்களை சேகரித்தலுக்காக சிங்களம், தமிழ், மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் செய்தித்தாள்களிலும் மற்றும் அமைச்சின் மற்றும் திணைக்களத்தின் வெப் பக்கத்திலும் விளம்பரப்படுத்தல்.

**4.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல்**

(அ) நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது பின்பற்றப்படுகின்ற கணக்கீட்டு எல்லை (பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மூலதர்மங்கள், இலங்கை அரச பிரிவு கணக்கீட்டு நியமங்கள் என்பன) மற்றும் கணக்கீட்டுக் கொள்கையை வெளிப்படுத்தல் வேண்டும்.

(ஆ) வேறு மரணச் சொத்துக்களுக்கு செலுத்தப்பட வேண்டிய மற்றும் வேறு மரணச் சொத்துக்களிலிருந்து பெறப்பட வேண்டிய பெறுமதிகள் நிதி கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். மற்றும் திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் அனைத்து மரணச் சொத்திற்கும் உரிய அசையும் மற்றும் அசையா ஆதனங்களை மதிப்பிட்டு சாதாரண தொகையை கணக்கிடப்படுதல் வேண்டும்.

**4.6 பொது மக்களுடனான தொடர்பு**

(அ) வெப் பக்கம் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நாளதுவரையாக பேணப்படுதல் மற்றும் கடைசி விருப்ப சாட்சியம் எழுதல் தொடர்பான அறிவுரைகள் மற்றும் மாதிரிகள், மாணவர் உதவி மற்றும் வைத்திய உதவி ஆகிய உதவி விண்ணப்பப் பத்திரங்கள் ஆகியன வெப் பக்கத்தின் ஊடாக தரவிரக்கம் செய்யும் வசதிகளை ஏற்படுத்தல்.

(ஆ) பொது மக்களின் கருத்துரைகள், ஆலோசனைகள் மற்றும் முறையீடுகளை பெற்றுக் கொள்ளும் முறைமையொன்றை அறிமுகஞ் செய்தல்.

ஒப்பம்./டபிள்யூ. பீ. சீ. விக்ரமரத்ன.
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன.
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
2021 ஏப்ரல் 30

**இணைப்பு - 01**

**(அ) நிலையான சொத்துக்கள் கணக்குகளுக்கு உள்ளடக்கப்படாத மரணச் சொத்துக்கள்**

| | மரணச் சொத்துக்கள் | | சொத்து / காணி /ஆதனத்தின் பெயர் | நிர்வாக உரிமங்கள் பெற்ற திகதி |
|---|---|---|---|---|
| (i) | ஸ்ரீமா இந்திராணி த சொய்சா | - | No 151 B, ஹைலெவல் வீதி நுகேகொடை (12.5 பேர்ச்சர்ஸ் உடைய காணி மற்றும் வீடு) | 2009.07.20 |
| | | - | நுகேகொடை இலங்கை வங்கி சுப்பர் தர கிளையின லொக்கர் இலக்கம் 738 இல் வைப்பு செய்யப்பட்டுள்ள தங்க ஆபரணங்கள் | |
| (ii) | வீரசிங்க அபேநாயக்க மரணச்சொத்து | - | மாத்தரை கபடா வீதியின் புங்ச்சிபதஹெதோட்ட “பீ” எழுத்து உடைய துண்டின் குத்தகை இலக்கம் 03 ஐ உடைய 32 பேர்ச்சஸ் விசாலமான காணி மற்றும் கட்டிடம் மற்றும் இலக்கம் 06 ஐ உடைய 37 பேர்ச்சஸ் விசாலமான காணி மற்றும் கட்டிடம் | 1982 மார்ச் 30 |
| | | - | மேல் கிருவாபத்துவே பொல்மொடேகமவில் அமைந்துள்ள மோதரமுனேயாய 72 பேர்ச்சஸ் காணி | |
| (iii) | ஆர்.எல்.எச் சந்திரசேகர மரணச் சொத்து | - | அனுராதபுரம் மாவட்டத்திலே நுவரகம் மாகாணத்தில் ஹெநானேகம வில் அமைந்துள்ள அதிகாரம் பெற்ற நில அளவையாளர் எஸ்.கே.கெலன்பேர்க் இனால் 1930.02.23 ஆம் திகதி | 2003 ஜூன் 04 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வரையப்பட்ட நில அளவை வரைபு லொட் இலக்கம் 1 மற்றும் 2 18 ஏக்கர் 03 ரூட் 01 பேர்ச்சஸ். | |
| | | - | அந்த நில அளவை வரைபின் லொட் இலக்கம் 3 – 17 ஏக்கர் 02 ரூட் 23 பேர்ச்சஸ் | |
| | | - | அனுராதபுரம் புதிய நகரத்தின் ஹரிஸ்சந்திர மாவத்தையின் இலக்கம் 48/388 உடைய இடத்தின் காணி மற்றும் வீடு | |
| | | - | அனுராதபுரம் பழைய நகரத்தின் குருநாகல் வீதி இலக்கம் 238 மற்றும் 239 உடைய வியாபார கட்டிடம் மற்றும் காணி | |
| (iv) | ஐ.டப்.சீ. விஜேயரத்ன மரணச் சொத்து | - | நோடர்ன் பிரிஜ் இல் அமைந்துள்ள வீடு | 1990.06.14 |
| (v) | நிஹால் பீரீஸ் மரணச் சொத்து | - | இரத்மலானை இல 57 இல் உள்ள வீடு | 2007.10.02 |
| (vi) | யூ.டீ.பீ.த சில்வா மரணச் சொத்து | - | 220/1 கெலின் வீதி ஹல்தும் முல்ல (வீடு) | 1994.01.31 |

**இணைப்பு – 02**

| | வீடு / ஆதனம் | 1973 ஒக்டோபர் 17 ஆம் திகதியில் பெறுமதி |
|---|---|---|
| | போகுந்தர பிலியந்தலை, மாபிடிய கெவத்த மற்றும் தெல்கஹவத்தயில் அமைந்துள்ள இலக்கம் 137, 138, 139, 145, 146, 147, 148, 149,150 மற்றும் 159 உடைய 7 ஏக்கர் 2 ரூட் 25.62 பேர்ச்சஸ் வீடு | 51,100 |
| | **வயல் காணிகள்** | |
| i. | வேரஹெர வலபாயபொத வயல் 4 ஏக்கர் 3 ரூட் 38 பேர்ச்சஸ் | 3,000 |
| ii. | வேரஹெர பொறுபனகே வயல் 9 பூசல் | 500 |
| iii. | கொரொக்கஹ வயல் 3 ஏக்கர் | 2,000 |
| iv. | தும்போவில ருவல்கே வயல் 3 ரூட் 28.5 பேர்ச்சஸ் | 750 |
| v. | குருந்துகஹ வயல் 3 ரூட் 30 பேர்ச்சஸ் | 750 |
| vi. | யக்தெஸ்ஸ வயல் | 2,000 |
| vii. | தும்போவில 1 ஏக்கர் 30 பேர்ச்சர்ஸ் வயல் | 500 |
| viii. | பண்டிபிட்டிய வயல் 3 ஏக்கர் 18 பேர்ச்சஸ் | 2500 |
| ix. | அஸ்வெந்தும வயல் 1 ரூட் 14.35 பேர்ச்சஸ் | |
| x. | தெல்கஹவத்த வயல் 2 ஏக்கர் 2 ரூட் 16 பேர்ச்சஸ் | |
| xi. | தெல்கஹவத்த வயல் 2 ரூட் | |

**இணைப்பு – 03**

**என்.டீ.எஸ்.சில்வா விஜேசிங்க மரணச் சொத்திற்கு உரிய கடைசி விருப்ப சாட்சியத்தின் பிரகாரம் புராதன பொருட்களின் பட்டியல்**

I. பெகிங்ஹெம் மாளிகையில் இடம் பெற்ற முதலியாரை வரவேற்கும் வைப்பவத்தில் நினைவுச் சின்னமான அதி உத்தம ஐந்தாவது அரசனால் வழங்கப்பட்ட இரத்தினக்கல் மற்றும் சிவப்புக்கல் பதிக்கப்பட்ட அரச சின்னம்.

II. பெல்ஜியத்தின் II வியோபோல்ட் மதிப்பிற்குரிய பலசேனினின் (Order of Leopold II of Belgium) நய்ட் கொமான்டர் பதவியின் தங்க உத்தியோகபூர்வ இலச்சினை மற்றும் நியமனம்.

III. கண்டி பிரதானியினால் வழங்கப்பட்ட விசாலமான தங்கப் பதக்கம்

IV. இலங்கை மக்களினால் வழங்கப்பட்ட விசாலமான தங்கப் பதக்கம்

V. விசாலமான Papal Reconciliation பதக்கம்

VI. பரிசுத்த செப்பல்கர் மதிப்பிற்குரிய பல சேனையின் (Order of Holy Sepulcher) நய்ட் கிரேண்ட் கொமாண்டரின் இரத்தினக்கல் நட்சத்திரம் இடுப்புப்பட்டி மற்றும் அதன் மதிப்பிற்குரிய பல சேனையின் முழுமையான சீருடை மற்றும் நியமனம்.

VII. சிறிய பாப் தங்கப் பதக்கம் (Papal Gold Medal) மூன்று

VIII. சாந்த சில்வெஸ்டரின் மதிப்பிற்குரிய பல சேனையின் (Order of St. Sylvester) நய்ட் கிரேண்ட் கொமாண்டரின் இரத்தினக்கல் நட்டத்திரம் மற்றும் இடுப்புப் பட்டி மற்றும் அதன் மதிப்பிற்குரிய பல சேனையின் முழுமையான சீருடை மற்றும் நியமனம்.

IX. களுத்துறை பிரதேச வாசிகளினால் கொடுக்கப்பட்ட விசாலமான வெள்ளி நன்றிப் பத்திரம்.

X. இத்தாலி கிரீடத்தில் நய்ட் பதவியில் (Knight Grand Officer) தங்க மற்றும் இனாமல் சிலுவையும் நட்சத்திரமும் மற்றும் நியமனம்

XI. படிகார முதலியாரின் தங்க வாள் மற்றும் இடுப்புப் பட்டியுடனான முழுமையான சீருடை

XII. அரச கடிதங்கள் மற்றும் ஞாபகார்த்த கையொப்பமிடப்பட்ட அரசர்களின் புகைப்படங்கள் உள்ளடங்கிய எல்பம்.

XIII. கலை விஞ்ஞான சங்கத்தின் (Society of arts, Science) Gold Cross of Merit மற்றும் நியமித்தல் உள்ளடங்கலாக பிரான்சிய கடிதம்

XIV. பிரான்சிய சாலமேன் மதிப்பிற்குரிய பல சேனையின் (order of the Crown of Charlemagne) Grand Cross க்கு உரிய நட்சத்திரம் மற்றும் இடுப்புப் பட்டி

XV. ஜெர்மனியின் பிலெக் ஈகல் மதிப்பிற்குரிய பல் சேனையின் (Order of Black Eagle) நயிட் கொமாண்டரின் வெள்ளி இலச்சினையும் கழுத்துப் பட்டியும் மற்றும் நியமித்தல்.

XVI. போர்த்துக்கேய அரசின் Cross of Devotion இல் இலச்சினை மற்றும் அதிகாரப் பத்திரம்

XVII. போலந்தின் யுத்த அமைச்சின் (சிவில் பிரிவு) Grand Officer of the Star க்கு உரிய இலச்சினை மற்றும் அதிகாரப் பத்திரம்

XVIII. ஸ்பானிய சாந்த ஜோன் பௌதீஸ்ம கரன்னாவின் மதிப்பிற்குரிய பல சேனையின் (order of St.John the Baptist of Spain) அதிகாரப் பத்திரம் மற்றும் Grand Cross

XIX. அமெரிக்க ஐக்கிய இராச்சியத்தின் கென்டகீஹி கர்னல்களின் Honorary Life Commandership க்கு உரிய அதிகார பத்திரம்

XX. ரோமின் பொன்டிபிகல் எகடமியின் அங்கத்துவம் தொடர்பான அதிகார பத்திரம்.

XXI. சாந்த ஜோன் லெடரனின் மதிப்பிற்குரிய பல சேனையின் (Order of St.John Lateran) Grand Cross க்கு உரிய அதிகாரப் பத்திரம்

XXII. மிகவும் பெறுமதி வாய்ந்த புராதன வஸ்துமான வத்திக்கானின் தீர்வு கூற்றுடனான தங்க முலாம் பூசப்பட்ட கரண்டுவ உடனான அதி மேதகு XI ஆவது பாப்பரசரினால் வழங்கப்பட்ட சத்திய சிலுவை (True Cross)

**இணைப்பு 04**

**தோட்டப் பிரிவின் நிதி முன்னேற்றம்**

| **தோட்டம்** | | **2016** | **2017** | **2018** | **2019** |
|---|---|---|---|---|---|
| சுதுவெலிபொத | வருமானம் | 2,722,842 | 4,074,863 | 2,205,438 | 1,605,261 |
| | செலவு | 3,512,560 | 3,697,125 | 3,192,185 | 3,015,061 |
| | இலாபம்/(நட்டம்) | (789,718) | 377,738 | (986,747) | (1,409,800) |
| வத்தகவத்த | வருமானம் | 1,987,861 | 2,484,976 | 1,828,171 | 2,284,013 |
| | செலவு | 2,384,803 | 1,980,457 | 2,044,373 | 2,800,418 |
| | இலாபம்/(நட்டம்) | (396,942) | 504,519 | (216,202) | (516,405) |
| ரிச்மன்ட்பாக் | வருமானம் | 2,832,537 | 3,299,475 | 2,657,603 | 2,469,680 |
| | செலவு | 2,822,437 | 2,707,247 | 2,988,982 | 3,460,327 |
| | இலாபம்/(நட்டம்) | 10,100 | 592,228 | (331,379) | (990,647) |
| இறஹுந்தயாவ | வருமானம் | 6,979,401 | 7,085,991 | 9,113,343 | 6,005,763 |
| | செலவு | 4,336,068 | 3,262,342 | 5,230,171 | 4,456,797 |
| | இலாபம்/(நட்டம்) | 2,643,333 | 3,823,649 | 3,883,172 | 1,548,966 |
| மலுவஹேனை | வருமானம் | 1,378,113 | 1,340,000 | 1,590,554 | 1,015,863 |
| | செலவு | 1,017,579 | 1,306,659 | 1,589,124 | 1,557,252 |
| | இலாபம்/(நட்டம்) | 360,534 | 33,341 | 1,430 | (541,389) |
| பிடகந்த | வருமானம் | 3,112,316 | 5,258,846 | 6,156,553 | 4,395,255 |
| | செலவு | 3,066,440 | 3,523,500 | 4,617,322 | 7,309,960 |
| | இலாபம்/(நட்டம்) | 45,876 | 1,735,346 | 1,539,231 | (2,914,705) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| லபுஹேன | வருமானம் | 1,188,569 | 1,161,166 | 1,288,602 | 786,054 |
| | செலவு | 1,183,703 | 3,523,500 | 2,067,035 | 2,387,171 |
| | இலாபம்/(நட்டம்) | 4,866 | (2,362,334) | (778,433) | (1,601,117) |
| கோப்வத்த | வருமானம் | 1,114,426 | 2,172,856 | 540,097 | 359,450 |
| | செலவு | 873,707 | 788,415 | 492,318 | 370,274 |
| | இலாபம்/(நட்டம்) | 240,719 | 1,384,441 | 47,779 | (10,824) |
| முஹன்திரம் ஜயவிக்ரம (திஸ்ஸமஹாராம) | வருமானம் | 2,126,782 | 3,317,538 | 652,784 | 387,976 |
| | செலவு | 1,138,942 | 1,048,795 | 589,076 | 1,178,094 |
| | இலாபம்/(நட்டம்) | 987,840 | 2,268,743 | 63,708 | (790,118) |
| மென்டிஸ் சில்வா (திஸ்ஸமஹாராம) | வருமானம் | 844,370 | 1,050,763 | 944,423 | 1,137,720 |
| | செலவு | 206,668 | 71,805 | 182,807 | 134,163 |
| | இலாபம்/(நட்டம்) | 637,702 | 978,958 | 761,616 | 1,003,557 |
| | | **3,744,310** | **9,336,629** | **3,984,175** | **(6,222,482)** |

**இணைப்பு 05**

**2015 இல் இருந்து 2019 வரை ஹெரிஹபுகொட மரணச் சொத்தின் வருமானம்.**

| வருடம் | மரணச் சொத்து | வருமானம் | செலவிட முடியுமான மரணச் சொத்து 4/5 | சேமிக்க வேண்டிய மரணச் சொத்து 1/5 |
|---|---|---|---|---|
| 2015 | ஹெரிஹபுகொட மரணச் சொத்து | 106,456 | 85,165 | 21,291 |
| | மத்தக தோட்டம் | 2,462,475 | 1,969,980 | 492,495 |
| | சுதுவெளிபொத தோட்டம் | 3,098,584 | 2,478,867 | 619,717 |
| 2016 | ஹெரிஹபுகொட மரணச் சொத்து | 4,500 | 3,600 | 900 |
| | மத்தக தோட்டம் | 1,987,860 | 1,590,288 | 397,572 |
| | சுதுவெளிபொத தோட்டம் | 2,722,842 | 2,178,274 | 544,568 |
| 2017 | மத்தக தோட்டம் | 2,484,976 | 1,987,981 | 496,995 |
| | சுதுவெளிபொத தோட்டம் | 4,074,863 | 3,259,990 | 814,973 |
| 2018 | மத்தக தோட்டம் | 1,828,171 | 1,462,537 | 365,634 |
| | சுதுவெளிபொத தோட்டம் | 2,205,438 | 1,764,350 | 441,088 |
| 2019 | மத்தக தோட்டம் | 2,284,013 | 1,827,210 | 456,803 |
| | சுதுவெளிபொத தோட்டம் | 1,605,261 | 1,284,209 | 321,052 |
| | | 24,865,439 | **19,892,451** | **4,973,088** |